330

# வேதமுத்துக்கள்

OFFICE OF THE REGISTRAR
19 NOV 1941
MADRAS



Q6
N41

# முன்னுரை

இந்த தியானபுஸ்தகம் நமது தாய்ச்சபையால் வெளியிடப்பட்ட ஒரு ஜெர்மன் புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பு. இப்புஸ்தகத்தின் ஆசிரியர் அமெரிக்க கலாசாலைகளிலொன்றில் பேராசிரியராய் இருக்கிற பிரசித்திபெற்ற ஆட்டோ ஹட்ஸ்டெட் சாஸ்திரியார் என்பவர் (Prof. Otto Hattstaedt, D. D.). அவர் தெரிந்தெடுத்த வேதவாக்கியங்கள் வாஸ்தவத்தில் வேதமுத்துக்களாயிருக்கின்றன. வேதத்திலிருக்கிற அருமையான வாக்கியங்களின் பெரும் பொக்கிஷத்திலிருந்தெடுக்கப்பட்ட இச்சில வாக்கியங்களை ஆண்டவர் தம்முடைய நாமமகிமைக்கென்று ஆசீர்வதிப்பாராக!

ஞானப்பாட்டுகளின் எண் புதிய சுவிசேஷ லுத்தரன் ஞானப்பாட்டு கீர்த்தனை மாலையிலுள்ள எண்களைக் குறிக்கிறது.

எம். இ. எல். ஐ. எம். பிரசுர கமிட்டியார்

OFFICE
19 NOV 1941
MADRAS

## திங்கட்கிழமை

### சிருஷ்டிப்பின் அதிசயம்

ஆதி. 1, 1: "ஆதியில் கடவுள் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"

இவ்வார்த்தைகள் சுலபமானவை. என்றாலும் இவைகளின் மேன்மையையும் ஆழத்தையும் கிரகிக்கக் கூடியவன் யார்? ஆதியில் இன்னும் ஒன்றுமில்லாதிருந்த காலத்தில், சகல வஸ்துக்களின் ஆரம்பத்தில், காலத்தின் ஆரம்பத்திலுங்கூட, கடவுள் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அழகான வான விரிவையும், பிரகாசிக்குஞ் சூரியனையும், பூமியையும், பூமியைச் சுற்றுகிற சந்திரனையும், வைரங்களைப்போல் ஜொலிக்கிற நட்சத்திரங்களையும் படைத்தார். அவர் இந்த அழகான பூமியையும் பிரம்மாண்டமான சமுத்திரத்தையும் உண்டாக்கினார். அவர் பூமியில் ஆயிரக்கணக்கான புல் பூண்டு விருட்ச வர்க்கங்களையும் கோடிக்கணக்கான மிருக ஜந்துக்களையும் சிருஷ்டித்தார். இதெல்லாவற்றையும் அவர் வெறுமையிலிருந்து படைத்தார்; வானத்தையும் பூமியையும் உண்டாக்கக்கூடிய பொருள் ஒன்றுமிருந்ததில்லை; அவருடைய சர்வ வல்லமையுள்ள வார்த்தை இதெல்லாவற்றையும் உண்டாக்கினது. இவைகளோடு அவர் ஆதியில் கோடிக்கணக்கான தெய்வ தூதர்களையும் உண்டாக்கினார். இவர்கள் சிருஷ்டிப்புக் காலத்தில் கடவுளின் துதியைப் பாடினார்கள். கடைசியில் அவர் காணப்படுகிற சிருஷ்டிகளில் பிரதான சிருஷ்டியாகிய மனிதனையும் சிருஷ்டித்தார். தமது நித்திய நோக்கத்தின்படி அவர் பூமியை மனுஷரால் நிரப்பத் தீர்மானித்தார். அதன் பிரகாரம் அவர் மனுஷனைத் தமது சாயலாகப் பூரண நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டித்தார். "கடவுள் தாம் உண்டாக்கின யாவற்றையும் பார்த்தார்; இதோ, அது மிகவும் நல்லதெனக் கண்டார்."

இது சிருஷ்டிப்பின் அதிசயம். இதை தியானிக்கும்போது கடவுளின் சர்வ வல்லமையையும் ஞானத்தையும் நன்மையையும் பற்றி நாம் அதிசயப்படவேண்டாமா? ஆம், பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்திற்கும் வல்ல சிருஷ்டி கர்த்தருக்குக் கனம் மகிமை துதி உண்டாவதாக, ஆமேன்.

ஞா. பா. 52

77359

## செவ்வாய்க்கிழமை

### *மீட்பரைப்பற்றிய வாக்குத்தத்தம்*

ஆதி. 3, 15: "உனக்கும் ஸ்திரீக்கும் உன் சந்ததிக்கும் அவள் சந்ததிக்கும் பகை உண்டாக்கிவைப்பேன். அது உன் தலையை நசுக்கும், நீ அதன் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"

இப்பூலோகத்தில் சம்பவித்தவைகளில் மிகப் பயங்கரமானதென்னவென்றால், ஏதேன் தோட்டத்தில் ஆதிப் பெற்றோர் பாவத்தில் விழுந்ததே. பாவமில்லாத நிலைமையில் அவர்கள் கடவுளோடு ஐக்கியப்பட்டுப் பூரண பாக்கியத்தை அனுபவித்திருந்தார்கள். ஆனால் சர்ப்பமாகிய பிசாசினால் ஏமாற்றப்பட்டு நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்துக் கடவுளின் கற்பனையை மீறின பிறகு, "சாகவே சாவாய்" என்னும் தண்டனைத் தீர்ப்பை அவர்கள் கேட்க வேண்டியதாயிருந்தது. இதைக் கேட்பது எவ்வளவோ பரிதாபகரமானது. ஆதிப் பெற்றோருடைய மனது இருளடைந்தது. அவர்கள் சாபத்தையும் ஆக்கினையையுந் தவிர தங்களுக்கு முன் ஒன்றையுங் காணவில்லை. ஆனால் அவர்கள் நித்திய மரணத்திற்குட்பட அவசியமில்லை. கருணை நிதியாகிய கடவுள் அவர்களை அணுகி நித்திய மரணத்திலிருந்து அவர்களை இரட்சிக்கப்போகும் ஓர் இரட்சகரை அனுப்புவதாக அவர்களுக்கு வாக்களித்தார். ஸ்திரீயின் வித்து அதாவது மனுஷ சக்தியில்லாமல் பிறக்கப்போகும் ஒருவர், நித்திய கடவுள் தாமே வருவார்; இவர் பிசாசோடு போர்புரிவார். இந்தப் போரில் மரணமடைவார், ஆனால் இந்த மரணத்தினாலேயே அவர் பிசாசின் தலையை நசுக்கி அவனிடமிருந்து மனுஷர் பேரில் அவனுக்கிருந்த வல்லமை முழுவதையும் பறித்துக்கொள்வார். இனிமேல் அவன் மனுஷரை ஒன்றுஞ் செய்ய முடியாது; அவன் அவர்களைக் கொள்ளைப் பொருளாக வைத்துக்கொள்ள முடியாது.

இது பரதீஸிலே சொல்லப்பட்ட இரட்சகரைப்பற்றிய ஆறுதலுள்ள வாக்குத்தத்தம். இது இயேசு கிறிஸ்துவில் எவ்வளவு அதிசயமாய் நிறைவேறிற்று! இந்த வாக்குத்தத்தத்தைக் கேட்கும்போது ஆதிப் பெற்றோர் எவ்வளவோ சந்தோஷத்தை அடைந்திருப்பார்கள். இந்த அருமையான வாக்குத்தத்தத்தினால் அவர்கள் மனமாறுதலடைந்து அதை விசுவாசித்து நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார்கள்.

ஞா. பா. 166

## மீட்பரால் சகலரும் அடையும் பாக்கியம்

ஆதி. 12, 3: "பூமியின் வம்சங்களெல்லாம் உன்னில் ஆசீர்வதிக்கப்படும்"

இரண்டாயிரம் வருஷ காலமாக மனுஷர் முதல் வாக்குத்தத்தத்தைத் தவிர இரட்சகராகிய ஸ்திரீன் வித்தைப்பற்றி ஒன்றும் அறியாமலிருந்தார்கள். ஆபிரகாம் வந்தபொழுது திரும்பவும் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டார்கள். ஆபிரகாம் வம்சத்தில் இரட்சகர் பிறப்பார். ஆகையால் அவனுக்கு இரண்டாவது வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. "பூமியின் வம்சங்களெல்லாம் உன்னில் ஆசீர்வதிக்கப்படும்"— இது எவ்வளவு மேன்மையான வசனம்! ஆபிரகாமினுடைய பெயர் பிரசித்தியடையும். தேவாசீர்வாதம் அவன்மேல் தங்கும். பூமியின் ஜனங்கள் யாவரும்— அவர்கள் எந்த வம்சத்தையும் ஜாதியையும் சேர்ந்தவர்களாயிருந்தாலுஞ்சரி— அவனாலே ஆசீர்வாதம் பெறுவார்கள். அவனுடைய வம்சம் ஒரு பெரிய ஜனமாகும். அதன் தொகை வானத்தின் நட்சத்திரத் திரள் போல் ஆகும். இது ஓர் அருமையான வாக்குத்தத்தம். இது எப்படி நிறைவேறும்? ஆபிரகாமின் வம்சத்தில் பிறக்கப்போகும் தேவ குமாரனாகிய மேசியாவால்தான். அவரே இரட்சிப்பையும் ஜீவனையும் மோட்சத்தையும் கொடுப்பார். பூமியின் சகல ஜனங்களையும் ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதம் அவரிடமிருந்துவரும்.

இந்த வாக்குத்தத்தம் எவ்வளவு சிறப்பாய் நிறைவேறிற்று! மேசியா வந்து தமது பாடுகளினாலும் மரணத்தினாலும் எல்லா மனுஷருக்காகவும் நித்திய இரட்சிப்பைச் சம்பாதித்தார். பூலோகத்திலிருந்த எந்த மனுஷனுக்கும் இருக்கிற எந்த மனுஷனுக்கும் இருக்கப்போகிற எந்த மனுஷனுக்கும் அந்த ஆசிர்வாதத்தைப் பெற உரிமை உண்டு. ஒருவனும் அதைப் பெற்றுக்கொள்ளாமற் போக வேண்டியதில்லை. "உலகமெங்கும் போய்ச் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்னும் மகிமையான கட்டளையின்படி அந்த இனிய சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட்டு வந்தது. அதனால் கணக்கற்ற ஆத்துமாக்கள் கடவுளுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டன. வானத்தின் கீழுள்ள சகல ஜனத்திற்கும் இதே சுவிசேஷம் உலக முடிவு பரியந்தம் பிரசங்கிக்கப்படும். இச்சுவிசேஷத்தினால் நாம் கிறிஸ்துவின் இரட்சிப்புக்குக் கொண்டு வரப்பட்டோம். இதனால் நாம் மனப்பூர்வமாய்ச் சந்தோஷப்பட வேண்டாமா?

ஞா. பா. 156

## தேவ வசனத்தைச் சுறுசுறுப்பாய் உபயோகித்தல்

யோசுவா 1, 8: "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டு அகலவேண்டாம்; இதில் எழுதியிருக்கிறவைகளின்படி எல்லாம் நீ செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி இரவு பகல் அதைத் தியானித்துக்கொண்டிரு; அப்பொழுது உன் வழி அனுகூலமாகும்படி செய்து சித்திபெறுவாய்"

இந்த வார்த்தைகள் நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான தேவ கட்டளை. இதில் கடவுள் தாம் கொடுத்தருளின வசனத்தை நாம் மதித்து நன்ருய் உபயோகிக்கும்படி சொல்லுகிருர். கெட்டுப் போய்ச் சபிக்கப்பட்ட பாவிகளாகிய நாம் ஆகாதவனின் மரணத்தை விரும்பாத கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த கிருபையை அதனுல் அறியவேண்டுமென்று விரும்புகிருர். அதனுல் நாம் அவருடைய வார்த்தையை இரட்சிப்பின் வழியைக் கண்டுபிடிக்கும் வாத்தையாக உபயோகிக்கவேண்டுமென்று கட்டளை இடுகிருர். நாம் அப்படிச் செய்யாவிட்டால் கடவுள் பாவிகளிடங்கொண்ட கிருபையைப்பற்றி எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? கேட்டிற்கு விலகி மோக்ஷத்திற்கு வழிநடத்தும் மார்க்கத்தை நாம் வேறு வழியாக எப்படி அடைய முடியும்? தனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் நல்ல சாப்பாட்டை ஒருவன் சாப்பிடாமற்போனுல் அதனுல் அவனுக்கு என்ன பிரயோஜனம்? நம்மிடத்தில் விசுவாசமும் அன்பும் நித்திய ஜீவனின் நம்பிக்கையும் உண்டாகும்படி நாம் சத்திய வேதத்தைப் பயபக்தியோடும் கவனத்தோடும் வாசிக்க வேண்டும். நாம் சத்திய வேதத்தைத் தினந்தோறும் அவ்விதமாய் உபயோகித்தால், நமக்கு ஒரு குறைவுமிருக்காது. நாம் எண்ணின காரியமெல்லாம் கைகூடும்; நாம் ஞானமாய் நடப்போம்; நமது முழு ஜீவனுக்கும் தேவ கட்டளைகளும் கடவுளின் நீதியும் ஏவற்காரணங்களாயிருக்கும். நாம் பாவஞ் செய்யாதபடி இவை பாதுகாக்கும்; நம்மை நல்வழியில் செலுத்தும்.

ஞா. பா. 97

*நித்திய ஜீவனுக்காக மாம்ச உயிர்த்தெழுதலைப்பற்றி கிறிஸ்தவனின் திட விசுவாசம்.*

யோபு 19, 25. 27: "எனை மீட்பர் உயிரோடிருக்கின்றார், இறுதியில் தூளிலே நிற்பார், அறிவேன்; .... நானே காண்பேன் அவரை என் சார்பில், அந்நியர் அல்லர் என என் கண்ணே காணும்"

*இவ்வார்த்தைகள் சரீரத்திலும் ஆத்துமத்திலும் துயரத்தை அனுபவித்த யோபு சொன்னவை. தன் சொத்து முழுவதையும் இழந்தவராயும் உடம்பு முழுவதும் கொடிய பருக்கள் கண்டு வாதிக்கப்பட்டவராயும் அவர் பட்ட கஷ்டம் சொல்லிமுடியாது. அதோடு அவருடைய சிநேகிதர்களும் வீட்டாரும் அவரைக் குற்றங்கூறி வந்தார்கள். ஆனால் அவருடைய பெரும் உபத்திரவத்தில் அவருடைய திடவிசுவாசம் விளங்குகிறது. அவருடைய மனக்கண்கள் தாம் நம்பும் மேசியாவைக் காண்கின்றன. அவர் சந்தோஷத்தோடு "எனை மீட்பவர் உயிரோடிருக்கின்றார்" என்று உரைக்கிறார். தம்முடைய மீட்பர் கல்லறையில் தங்காமல் அதைவிட்டு மகிமையோடு வெளி ஏறுவார் என்றும் தம்மையும் உயிரோடெழுப்புவார் என்றும் அவர் அறிகிறார். இப்பொழுது புண்பட்ட சரீரத்தை அவர் தம்முடைய மகிமையான சரீரத்திற்கொப்பாக மறுரூபப்படுத்துவார் என்ற விசுவாசத்தோடு அவர் "நானே காண்பேன் அவரை என் சார்பில்" என்கிறார். மோக்ஷத்தில், மோக்ஷானந்தத்தில் அவர் கடவுளை அவருடைய முழு மகிமையிலும் தரிசிப்பார்.*

*ஆ, இது எவ்வளவு அருமையான வசனம்! இவ்வுலகத்தின் துன்பநிலையில் நமக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைவிட வேறு எது அதிக ஆறுதலைக் கொடுக்க முடியும்? ஒவ்வொரு கிறிஸ்தவனும் யோபோடு இவ்வாறுதலான வார்த்தைகளைச் சொல்லி மாம்ச உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிக்கக்கூடும்.*

ஞா. பா. 244.

## தேவாராதனையில் கிறிஸ்தவன் அடையுஞ் சந்தோஷம்

சங். 27, 4: "ஒன்றை நான் யேகோவாவினிடம் கேட்டேன்; அதையே நாடுவேன்: நான் யேகோவாவின் திவ்விய பிரசன்னத்தைப் பார்க்கவும் அவர் ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யவும் என் ஜீவனுள்ள நாளெல்லாம் யேகோவாவின் ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்"

தாவீது தன் ஜீவனுள்ளநாளெல்லாம் கடவுளின் ஆலயத்தில் தங்கியிருந்து அவருடைய திவ்விய பிரசன்னத்தைப் பார்க்க விழும்புகிறூர். பழைய எற்பாட்டின் காலத்தில் தேவாலயத்தில் நடந்த ஆராதனைகள் — பலிகளும் ஜெபங்களும் பாடகர்களுடைய பாட்டுகளும் — திவ்வியமாயிருந்தன. புதிய எற்பாட்டு ஆராதனைகளில் அப்பேர்ப்பட்ட எழுப்புதலான காரியங்கள் இல்லையென்று சொல்லலாமா? தாவீது சொன்ன அதே ஜெபத்தை நாமும் ஜெபிப்பதற்கு இடமுண்டு. நமது ஆராதனைகளும் திவ்வியமானவை. ஆவிக்குரிய ஆசாரியர்களாகிய நாம் ஞாயிற்றுக்கிழமைதோறும் கடவுளின் திவ்விய பிரசன்னத்தை அடைந்து பாட்டுகளாலும் ஜெபங்களாலும் அவருக்கு நமது உதடுகளின் பலிகளைச் செலுத்துகிறோம். நாம் ஒன்றாய்க் கூடிக் கடவுளின் இரக்கத்தைப் போற்றுவது எவ்வளவு மேன்மையானது! பிரசங்கத்தில் கடவுளின் வசனத்தைக் கேட்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம்! அதில் நமக்குப் பாவத்தைப்பற்றியும் கிருபையைப்பற்றியும் இனிய போதனை அளிக்கப்படுகிறது. ஞானப் பிரசங்கம் சுவிசேஷத்தின் ஆறுதலை நமக்கு ஊட்டி இச்சுவிசேஷத்திற்குப் பாத்திரராகத் தேவபிள்ளைகளுக்கொத்தபடி நடக்க நம்மை வழி நடத்துகிறது. இராப்போஜன திரு விருந்தில் புகழப்பட்ட நம்முடைய ஆண்டவருடைய மெய்யான சரீரத்தையும் இரத்தத்தையும் நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். அதனால் நமக்குப் பாவ மன்னிப்பும் நித்திய ஜீவனும் உண்டென்னும் நிச்சயத்தை அடைகிறோம். இது எவ்வளவோ ஆனந்தத்தை அளிக்கும் விருந்து.

நாளைக்கு திரும்பவும் தேவாலயத்தின் அலங்கார வாசல் நமக்காக திறக்கப்படும். அவ்விடம் நமது ஆத்துமாக்கள் போஷிக்கப்படும். அங்கே நாம் கடவுளை சேவிப்போம். அவருக்கு இந்த பெரிய தயவுக்காக நன்றிச் செலுத்துவோமாக!

ஞா. பா. 4.

## பாவமன்னிப்பு

சங். 32, 1.2: "எவன் மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவன் பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான். எவன் பாவத்தை யெகோவா எண்ணுதிருக்கிருரோ, எவன் ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்"

பாவமன்னிப்பைப்பற்றிய போதனை வேதத்திலிருக்கிற எல்லாப் போதனைகளிலும் முக்கியமும் ஆறுதலுமான போதனை. ஏனெனில் பாவமன்னிப்பில்லாமல் நாம் மோக்ஷத்தையும் ஆனந்தத்தையும் அடையவே முடியாது; அதில்லாமல் நாம் நித்திய சாபத்தையும் ஆக்கினையையும் அடைவோம். பாவமன்னிப்பு எங்கேயோ அங்கே ஜீவனும் மோக்ஷமும் இருக்கும். இந்தப் பாவமன்னிப்பை அடைவதே எல்லாவற்றிற்கும் விசேஷமானது என்று நாம் எண்ணவேண்டும். இதை அடைவதற்கு வழி என்ன? ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! இதை அடைவதற்கு நிச்சயமான ஒரு வழி உண்டு. மெய்ம் மனஸ்தாபமே இந்த வழி. தேவ வசனத்தைக்கொண்டு நாம் கடவுளின் கோபாக்கினைக்குப் பாத்திரரான பாவிகள் என்று அறிந்து பாவத்திற்காக விசனப்படுவது இந்த மனஸ்தாபத்தின் முதற்பாகம். சிலுவை மரத்தில் நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் ஈடு செலுத்தின இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதே மனஸ்தாபத்தின் விசேஷித்த பாகம். இவ்விதமாக ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசம் வைத்து முழுமனதோடும் அவர்மேல் சார்ந்திருக்கிற மனுஷனுக்குக் கிருபையுள்ள கடவுள் பாவத்தை மன்னித்துக் கிறிஸ்து சம்பாதித்த நீதி என்னும் வஸ்திரத்தை அவனுக்குத் தரிப்பித்து அவனைப் பாவஞ் செய்யாதவனுக மதிப்பார். இதுதான் கடவுள் மனுஷனுக்கு அளிக்கும் மேன்மையான ஈவு. அப்படிப்பட்டவன் பாக்கியவான், அவன் தேவபிள்ளை. இன்னும் பாவம் அவனில் உண்டென்பது வாஸ்தவந்தான். இன்னும் அவன் தினந்தோறும் மனதினுலும் வாக்கினுலும் கிரியையினுலும் பாவஞ் செய்கிறுன். ஆனுல் அவன் விசுவாசத்தில் நிலைநிற்கிறவனுயிருந்தால், அவன் கபடமில்லாதவனுய் அப்பாவத்திற்காக விசனப்பட்டு அதை வெறுத்துத் தினந்தோறும் ஆண்டவரிடத்தில் மன்னிப்புத் தேடுவான். தினந்தோறும் கடவுள் அவனுடைய பாவங்களையெல்லாம் அவனுக்கு மன்னிப்பார். ஆம், எவன் அக்கிரமத்தை யெகோவா எண்ணுதிருக்கிருரோ அவன் பாக்கியவான்.

ஞா. பா. 416.



OFFICE OF THE REGISTRAR OF B...
19 NOV 1941
MADRAS

## கிறிஸ்தவன் துயரத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளல்

சங், 42, 1. 2: "மானானது நீரோடைகளை வாஞ்சிக்கிறதுபோல கடவுளே, என் ஆத்துமா உம்மையே வாஞ்சிக்கிறது. என் ஆத்துமா கடவுளின்மேல், ஜீவனுள்ள கடவுளின் மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது கடவுளின் திருச் சந்நிதியில் வந்து காணப்படுவேன்"

கலகம் பண்ணின தன் மகனாகிய அப்சலோமிடமிருந்து ஓடும்போது தாவீது 42—ம் சங்கீதத்தை இயற்றினார். கெட்ட எதிராளிகளுக்கு விலகி ஓடிப்போவது ஒன்றுதானா கிறிஸ்தவன் அனுபவிக்கும் கஷ்டம்? இல்லை, அநேக உபத்திரவங்களின் வழியாய் நாம் கடவுளின் ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும். சில சமயங்களில் நம்மை அதிகச் சஞ்சலத்திற்குட்படுத்தும் பெரிய உபத்திரவங்கள் ஏற்படும். எத்தனையோதரம் ஒருவன் தன் சொத்து முழுவதும் இழந்துபோய்ப் பரம ஏழையாவான். எத்தனையோதரம் இடிச்சேதம், அக்கினி, பெருங்காற்று முதலிய தீமைகளால் ஒருவன் பெருங் கஷ்டமடைந்திருப்பான். எத்தனையோதரம் நம்மில் ஒருவன் கொடிய வியாதியினால் வருந்த நேரிடும். ஆம், சுகத்தை அனுபவிக்கிற தேவ பக்தியற்றவர்களைவிடக் கிறிஸ்தவர்களுக்குச் சில சமயங்களில் அதிக அடிகள் கிடைக்கும். அந்தச் சமயங்களில் அவர்கள் தைரியமற்றவர்களாய்ச் சஞ்சலப்பட்டுக் கடவுள் தங்களை விட்டுவிட்டாப்போல் புலம்புகிறார்கள். ஆனால் மந்தாரமாயிருந்தால் சூரியன் இல்லை என்று சொல்லலாமா? கடவுள் அவர்களை விட்டுவிடவில்லை. கஷ்டகாலத்தில் அவர் அவர்களோடிருந்து அவர்களுடைய உபத்திரவத்தை அறிந்து ஒவ்வொரு கண்ணீர்த் துளியையும் கணக்கிட்டுப் பார்க்கிறார். அவர்கள் அவருடைய நேசபிள்ளைகள் அல்லவா? ஒரு க்ஷணப்பொழுதாகிலும் கடவுள் அவர்களைக் கைவிடமாட்டார். அவர்தாமே அவர்களைப் பரீட்சிக்கும்படி இந்த உபத்திரவத்தை அவர்கள்மேல் வரப்பண்ணினார். ஒவ்வொரு சிலுவையும் நன்மைக்கேதுவாக வந்தது என்று அவன் அறிவான். அதனால் பெரும் உபத்திரவத்தில்கூடக் கிறிஸ்தவர்கள் தங்கள் கடவுளுக்குச் சந்தோஷத்தோடு காத்திருக்கக்கடவார்கள். ஏனெனில் அவர்களைச் சஞ்சலப்படுத்தின பிறகு நிச்சயமாய்த் திரும்ப ஆற்றித்தேற்றுவார்.

ஞா. பா. 493.

## செவ்வாய்க்கிழமை

### *விசுவாசமுள்ள ஜெபம்*

சங். 50, 15: "ஆபத்து நாளிலே என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப்படுத்துவாய்"

*ஜெபம் வெகு அருமையான ஒரு தேவாராதனை. பிள்ளைகள் தங்கள் தகப்பனோடு இனிய சம்பந்தமாய் நடக்கிறதைப்போல் கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபத்தில் நமது பரம தகப்பனோடு நெருங்கிய சம்பந்தத்தில் இருக்கிறோம். நம்மை ஜெபத்திற்கு ஏவி விடுவது கடவுளுடைய சித்தமே. அவர் நம்மைப் பார்த்து: "என்னை நோக்கிக் கூப்பிடு" என்கிறார். ஜெபஞ்செய்யாதவன் கிறிஸ்தவன் அல்ல. ஏனெனில் ஜெபத்தினால்தான் நாம் தேவப்பிள்ளைகளாக விளங்குகிறோம். ஆனால் நம்மை ஜெபத்திற்கு ஏவிவிடும் இன்னொரு காரணம் உண்டு. அது நம்முடைய குறைவுகளும் பிறத்தியானுடைய தேவைகளும். நம்மைச் சரீரப்பிரகாரமும் ஆத்துமப்பிரகாரமும் கஷ்டப்படுத்தும் எத்தனையோ குறைகள் உண்டு! விசேஷமாய்ப் பிசாசு நம்மைப் பலமாய்ச் சோதித்து நமது இரட்சிப்பைப் பற்றி மனதில் சந்தேகமுண்டாக்கும்பொழுது நாம் கடவுளை நோக்கி அவருடைய இரக்கத்தை முன்னிட்டு ஜெபிப்பது அத்தியந்த அவசியம். நமது ஒவ்வொரு குறையையும் அவருக்குச் சொல்லி எந்தக் காரியத்திலும், அது பெரியதாயிருந்தாலுஞ்சரி, சிறியதாயிருந்தாலுஞ்சரி, அவருடைய ஒத்தாசைக்காக வேண்டிக்கொள்ளவேண்டும். நமது ஜெபம் வீணாகாது. "நான் உன்னை விடுவிப்பேன்" என்று நமது பரம பிதா தெளிவாய்ச் சொல்லுகிறார். நமது இரட்சகர் பெருமான் இதை உறுதிப்படுத்துகிறார்: "நீங்கள் எவைகளை ஜெபித்துக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று நம்புங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லுகிறேன்," மார். 11, 24. கடவுள் நம்முடைய ஒவ்வொரு வேண்டுதலையும் ஜெபத்தையும் கேட்டுக் கொடுக்கிறார். அவர் எப்பொழுதும் நாம் விரும்புகிறபடி அல்லது நமக்குச் சரியாய் விளங்குகிறபடி செய்யமாட்டார்; ஆனால் அவர் செய்யும்பொழுதும் நாம் எப்பொழுதும் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்திருக்கிறார் என்று சொல்லக்கூடும். அந்தச் சமயத்தில் நாம் அவரை மகிமைப்படுத்தவும் நாம் பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகளுக்காகவும் நன்றி செலுத்தவும் மறவாமலிருப்போமாக. நாமெல்லாரும் தேவ மகிமைக்கென்றும் நமது சொந்த நன்மைக்கென்றும் ஊக்கமாக ஜெபஞ் செய்வதற்குக் கடவுள் கிருபை செய்வாராக.*

ஞா. பா. 397.

# புதன்கிழமை

## தேவதூதரின் பராமரிப்பு

சங். 91, 11. 12: "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தமது தூதருக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் படாதபடி அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொள்வார்கள்"

கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தபோது தேவதூதர்களையும் சிருஷ்டித்தார் என்பதை அறிந்து நாம் சந்தோஷப்படவேண்டாமா? இந்த மேன்மையான சிருஷ்டிகளை அவர் எதற்காகச் சிருஷ்டித்தார்? விசேஷமாகத் தம்முடைய கனம் வல்லமை மகிமை ஆகியவைகளின் துதிக்காகவே அவர் அவர்களைச் சிருஷ்டித்தார். ஆனால் அவர்களுக்குப் பரமண்டலத்தில் மாத்திரமல்ல, பூலோகத்திலும் வேலையிருக்கிறது. அவர்கள் கடவுளைத் துதிப்பதோடு மனுஷருக்கும் ஊழியஞ் செய்து வருகிறார்கள். விசேஷமாய் நீதிமான்களை அவர்கள் வழிகளில் காப்பாற்றும்படி அன்புள்ள கடவுள் அவர்களைக் கோடிக்கணக்கில் பூலோகத்திற்கு அனுப்புகிறார். இது அத்தியந்த அவசியம், ஏனெனில் சரீரத்தையும் ஆத்துமாவையும் எத்தனையோ ஆபத்துக்கள் சூழ்ந்திருக்கின்றன. நமக்குச் சேதம் நேரிடாதபடி பரிசுத்த தூதர் நம்மைப் பாதுகாக்கிறார்கள். நாம் எல்லாரும் தேவதூதர்களின் பராமரிப்பை அனுபவித்திருக்கிறதில்லையா? நமக்கு இன்னும் சுகமுள்ள அவயவங்களும் உயிரும் இருப்பதற்கு அவர்களுடைய பராமரிப்பே காரணமல்லவா? அப்படிப் பாலபருவத்திலிருந்து மரண நாள்வரைக்கும் தேவதூதர்கள் நமக்கு ஊழியஞ்செய்து வருகிறார்கள். ஆனால் நாம் "உன் வழிகளிலெல்லாம்" என்னும் வார்த்தைகளை நன்கு கவனிப்போமாக. இந்த வழிகள் என்னவென்றால் நாம் நல்ல மனச்சாட்சியோடு செல்லும் வழிகள். அதாவது நாம் கிறிஸ்தவர்களாகச் செய்யும் கிரியைகளே. அவைகளில் தேவதூதர் நம்மைக் காப்பாற்றுவது நிச்சயம். ஆண்டவர் தனக்குக் காட்டின வழியைவிட வேறே வழிகளில் போகிறவன் தேவதூதர்களின் பராமரிப்பை எதிர்பார்க்கமுடியாது.

நம்முடைய பராமரிப்புக்காகத் தேவதூதரைச் சிருஷ்டித்த கடவுளின் அன்பைத் துதிப்பதற்கு நாம் கடமைப்பட்டவர்கள் அல்லவா? நாம் மனதாரப் பாவஞ்செய்து தேவதூதர்களை விசனப்படுத்தி நம்மிடமிருந்து துரத்திவிடாதபடி ஜாக்கிரதையாயிருப்போமாக.

ஞா. பா. 532.

## கிறிஸ்தவனின் சிலுவை ஓர் ஆசீர்வாதம்

சங். 91, 10: "பொல்லாப்பு உனக்கு நேரிடாது; வாதை உன் கூடாரத்தை அணுகாது"

கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பரம பிதாவினுடைய பராமரிப்பும் தேவதூதர்களுடைய பாதுகாப்பும் உண்டு. நாம் கடவுளுடைய பிள்ளைகளாயிருக்கிறதினால் இதை நிச்சயமாய் நம்பலாம். சில சமயங்களிலோ கடவுளின் பாதுகாப்பு நமக்கு இல்லாததைப்போல் தோன்றுகிறது. கிறிஸ்தவர்களுக்கு அநேகமாய் அதிகக் கஷ்டம் வருகிறது என்று அனுபவத்தினால் அறிந்துகொள்ளுகிறோம். எத்தனையோ கிறிஸ்தவர்கள் அகால மரணம் அடைகிறார்கள்! எத்தனையோ கிறிஸ்தவர்கள் அதிகப் பாரமான சிலுவையைச் சுமக்க வேண்டியதாயிருக்கிறது. அந்தச் சமயங்களில் கடவுள் கிறிஸ்தவனைக் கைவிட்டாப்போல் தோன்றுகிறது. ஆனால் கடவுளுக்கு ஸ்தோத்திரம், இது வெறுந் தோற்றந்தான். என்ன வந்தாலும் கிறிஸ்தவன் கடவுளுடைய பராமரிப்பை எதிர்பார்க்கலாம். அவர் நம்மேல் கோபமாயிருக்கமாட்டார். அவர் சொன்ன வார்த்தை எப்பொழுதும் உண்மையாய் இருக்கும்: "பொல்லாப்பு உனக்கு நேரிடாது; வாதை உன் கூடாரத்தை அணுகாது." கடவுள் தமது சர்வஞானத்தின்படி ஒரு பொல்லாப்பை நமக்கு நேரிடச் செய்தால் அது உண்மையில் பொல்லாப்பல்ல, அது அளவற்ற ஆசீவாதம். ஏனெனில் கடவுளிடம் அன்புகூருகிறவர்களுக்குச் சகல காரியங்களும் நன்மைக்கேதுவாக ஒத்து நடக்கின்றன. ஒரு பொல்லாப்பு நமக்கு நன்மைக்கேதுவாயிருந்தால் நாம் அதைப் பொல்லாப்பு என்றழைக்கலாமா? அழைக்கமுடியாது. அதற்குமாறாக அது நமக்கு நன்மை விளைவிக்கும் எத்தனம்; அதற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள். அகால மரணத்தினால் கடவுள் எத்தனையோ கிறிஸ்தவர்களைக் கன பாவத்திலிருந்து காப்பாற்றி இருப்பார். அதனால் நாம் எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறதாவது: "என் மகனே, கர்த்தரின் சிட்சையை அற்பமாய் எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே." நாம் நமது விசுவாசக்கண்களைத் திறந்து கடவுள் நம்மை எவ்வளவு ஞானத்தோடு நடத்திவருகிறார் என்று பார்ப்போமாக! இம்மையில் நமக்கு விளங்காமலிருக்கும் காரியங்கள் மறுமையில் தெளிவாய் விளங்கும்.

ஞா. பா. 370.

## வெள்ளிக்கிழமை

### நன்றி செலுத்துவது கிறிஸ்தவனின் கடமை

சங். 107, 1: "யேகோவாவுக்கு நன்றி சேலுத்துங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது"

கடவுளுக்கு நன்றி செலுத்துவது கிறிஸ்தவ ஜீவனின் விசேஷித்த பங்குகளில் ஒன்று; ஏனெனில் அவர் நமக்குத் தினந்தோறும் செய்துவரும் நன்மைகள் கணக்கற்றவை. அவர் நம்மைப் பிரமிக்கத்தக்கவண்ணமாய்ச் சிருஷ்டித்து நமக்குக் கண் காது முதலான சகல அவயவங்களையும் புத்தியையும் சகல இந்திரியங்களையும் கொடுத்தது துதிக்குப் போதுமான காரணம். இந்நாள்வரைக்கும் அவர் நம்மை எவ்வளவு ஆச்சரியமாய்ப் பராமரித்திருக்கிறார். லுத்தர் சாஸ்திரியார் சொல்லுகிறபிரகாரம் அவர் அன்னவஸ்திரம் பிழைப்த்தொழில் பெண்ஜாதி பிள்ளை வீடுவாசல் ஆடு மாடு நிலம் முதலிய சகல ஆஸ்திகளையும் நமக்குக் கட்டளையிட்டு நம்மை அனுதினமும் பரிபூரணமாகப் பராமரித்து, சகல மோசங்களுக்கும் நம்மை மறைத்துச் சகல பொல்லாங்குகளுக்குந் தற்காத்து இரட்சித்துவருகிறார். தன் கடவுளுக்கு மனதார நன்றி செலுத்துவதற்கு ஒரு கிறிஸ்தவனுக்கு எத்தனையோ காரணங்கள் உண்டு! இதுவரைக்கும் நாம் குறிப்பிட்டது இலௌகீக காரணங்கள் மாத்திரமே. கடவுள் நம்மேல் வருஷித்த ஆத்மீக நன்மைகள் இன்னும் எவ்வளவு ஏராளம்! ஞானஸ்நானத்தினால் அவர் நம்மைப் பிசாசின் இராஜ்யத்திற்கு நீங்கலாக்கித் தம்முடைய கிருபையின் ராஜ்ய நன்மைகளுக்குப் பங்காளிகளாக்கியிருக்கிறார். அதில் அவர் நமக்குப் பாவமன்னிப்பையும் நீதியையும் சமாதானத்தையும் அளிக்கிறார். நம்மைத் தேவபுத்திரரும் நித்திய ஜீவனின் சுதந்தரருமாக்கும் விசுவாசத்தை நம்மிடத்தில் உண்டாக்கியிருக்கிறார். தமது அருமையான வார்த்தையினால் அவர் நமக்கு அடிக்கடி போதித்து வழிநடத்தி ஆற்றித்தேற்றி வருகிறார். இதெல்லாவற்றையும் நாம் சரிவர உணர்ந்துகொண்டால் நம்முடைய இருதயங்கள் நன்றியறிதலால் நிறைந்திருக்கும், நாம் கடவுளுடைய அன்பையும் இரக்கத்தையும் துதிப்போம். ஏனெனில் நாம் இந்த நன்மைகளையெல்லாம் சம்பாதிப்பதற்கு ஒன்றுஞ் செய்யவில்லை — இவைகளையெல்லாம் அவருடைய கிருபாகடாட்சத்தினாலேயே பெற்றுக்கொண்டோம். ஆம், யேகோவாவுக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் உள்ளது.

ஞா. பா. 65.

## தீபமும் வெளிச்சமுமாயிருக்கிற கடவுளின் வசனம்

சங். 118, 105: "உமது வார்த்தை என் கால்களுக்குத் தீபம்; அது என் பாதைக்கு வெளிச்சம்"

நமது வேதவாக்கியம் அடங்கியிருக்கிற 119-ம் சங்கீதம் இரட்சிப்புக்கு ஒரே வழியாயிருக்கிற வேதவசனத்தைப்பற்றிச் சொல்லுகிறது. நாம் இரட்சிப்புக்குப் போகும் வழியைத் தவருமல் கண்டுபிடிக்கவேண்டுமானுல் கடவுளின் வசனம்தான் நமது பாதைக்கு வெளிச்சமாயிருக்கவேண்டுமென்று நமது வேதவாக்கியமும் சொல்லுகிறது. இது ஒரு விசேஷித்த உண்மை; ஏனெனில் கடவுளின் வசனமில்லாமலிருக்கிறவர்கள் இருளில் நடந்து வழிதவறிப் போய் விடுகிருர்கள். தங்கள் இரட்சிப்புக்கு அவசியமானதை அவர்கள் அறியாமலிருக்கிருர்கள். நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றியும் அவர் சம்பாதித்த பாவமன்னிப்பைப்பற்றியும் விசுவாசத்தைப்பற்றியும் மோக்ஷம் நரகம் என்பவைகளைப்பற்றியும் இரட்சிப்பை அடையப்போகிறவர்களுடைய பாக்கியத்தைப்பற்றியும் ஆக்கினைக்குள்ளாகப்போகிறவர்களுடைய பயங்கர தண்டனையைப்பற்றியும் அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாயிருக்கிருர்கள். தேவவசனமில்லாதிருக்கிறவர்களின் ஆத்மீக இருள் இதுவே.

கடவுளுடைய வசனமுடையவர்களாய் அதைத் தங்கள் இரட்சிப்புக்கு உபயோகிக்கிறவர்களுடைய நிலைமையோ எவ்வளவு பாக்கியமுள்ளது! அவர்கள் இருளிலல்ல, பட்டபகலில் நடக்கிருர்கள். அவர்களுடைய இருதயங்களில் கடவுளையும் அவர் குமாரனையும் அறிகிற மெய்யான அறிவு ஒரு தீபம்போல் எரிகிறது. நித்திய ஜீவனுக்குப் போகும் வழி அவர்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது: அவர்கள் சந்தேகமற அதிலே நடக்கக்கூடும். ஏனெனில் அவர்கள் கால் தவறிவிடாதபடி தேவவசனம் அவர்களுக்கு வழிகாட்டுகிறது.

அதேவிதமாக தேவவசனம் நம்முடைய இருதயங்களிலிருந்து சகல இருளையும் அகற்றிவிடுகிறது. இத்தேவவசனத்தை அசட்டை செய்கிறவர்களுக்கு ஐயோ, கேடாம். அதைக் கவனிக்காமற் போனதற்காக அவர்கள் நித்தியகாலமாக விசனப்படுவார்கள். அதைத் தங்கள் இரட்சிப்புக்கென்று உபயோகிக்கிறவர்களோ பாக்கியவான்கள். நித்தியகாலமாக அவர்கள் கடவுளுக்கு அதற்காக நன்றிசெலுத்துவார்கள்.

ஞா. பா. 98.

## ஞாயிற்றுக்கிழமை

### கடவுளின் அதிசய வழிகள்

ஏசா. 28, 29: "அவர் ஆலோசனையில் அதிசயமானவர், ஞானத்தில் மகத்துவமானவர்"

கடவுள் அதிசயமானவராயிருக்கிறதுபோல் அவருடைய ஆலோசனைகளும் அதிசயமானவைகளே. சர்வவல்லமையும் சர்வ ஞானமும் சர்வ அறிவுமுடைய வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராகிய அவருடைய வழிகளில் சிலவற்றை நாம் பார்க்கும்போது பிரமித்து நிற்கவேண்டியதாயிருக்கிறது. யோசேப்பின் சரித்திரம் இதற்கு ஓர் உதாரணம். கடவுளுடைய ஆலோசனையின்படி அவர் ஒரு காலத்தில் எகிப்துதேசத்தில் ஒரு பெரிய சீமானுகிப் பஞ்ச காலத்தில் தம் தகப்பனருக்கும் சகோதரருக்கும் உதவிபுரிபராக வேண்டும். ஆனல் நடந்ததென்ன? பொறாமை காரணமாய் அவர் ஓர் அடிமையாக எகிப்துதேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அவ்விடத்தில் பாவத்துக்கிடங்கொடாததினிமித்தம் சிறையில் போடப்பட்டார். கடவுளின் ஆலோசனைக்கு இது நேர்விரோதமாய்த் தோன்றவில்லையா? கடவுளின் ஆலோசனையோ அதிசயமானது. சிறைச்சாலையே யோசேப்பு மந்திரியாவதற்கு ஏதுவாயிருந்தது. இதனல் கடவுள் தமது அதிசய ஆலோசனையின்படி எல்லாம் சிறப்பாக நடந்தேறப்பண்ணுகிருர் என்று அறிந்துகொள்கிருேம். மோசேயும் ராஜாவுக்குத் தப்பியோடி நாற்பது வருஷகாலம் வனாந்தரத்தில் இருக்கவேண்டியதாயிற்று. அந்த வனவாசத்தினல் கடவுள் அவரைத் தமது ஜனங்களை நடத்தத்தக்க வழிகாட்டியாக்கினர். அக்காலத்தில் செய்ததைப்போல் தற்காலத்திலும் கடவுள் செய்து வருகிருர். ஒரு நாள் ஒரு போதகர் வழியில் கனத்த மழையில் அகப்பட்டுப் பக்கத்திலுள்ள ஒரு வீட்டில் தங்கவேண்டியதாயிற்று. அவ்வீட்டில் மரணவஸ்தைப்படுகிற ஒரு வியாதியஸ்தன் இருந்தான். அவ்வியாதியஸ்தனுக்கு இப்போதகர் நல்லாறுதல் சொல்வதற்கு அந்தக் கனத்த மழை ஏதுவானது. ஆம், கடவுளின் ஆலோசனைகள் அதிசயமானவை. யோசேப்பின் சரித்திரத்தினல் நாம் அறிந்துகொள்ளுகிறபடி கடவுள் தம்முடையவர்களை அடிக்கடி கரடுமுரடான வழிகளில் நடத்திவருகிருர்; கடைசியிலோ கடவுள் எல்லாவற்றையும் நன்மையாக்குகிருர் என்று விளங்குகிறது.

ஞா. பா. 385.

# திங்கட்கிழமை

## பாவ நிர்ப்பந்தத்தில் கிறிஸ்தவனுடைய ஆறுதல்

ஏசா. 38, 17: "நான் அனுபவித்த கசப்புகளெல்லாம் என் சமாதானத்திற்கேதுவாயின; தேவரீரே என்னை நேசித்து அழிவின் குழிக்கு என்னை விலக்கிவிட்டீர். என்னுடைய பாவங்களெல்லாவற்றையும் உமது முதுகுக்குப் பின்னே எறிந்து விட்டீரே"

அசிரியா ராஜாவாகிய சன்னகேரிப் தன்னுடைய திரண்ட சேனையோடு எருசலேமைப் பிடிக்கப் பார்த்தபொழுது கடவுள் பட்டணத்தை அதிசயவண்ண்மாக இரட்சித்தார். சில நாட்களுக்குப் பிறகு யூதாவின் ரராஜாவாகிய எசேக்கியா மரணபத்துக் கேதுவாய் வியாதிப்பட்டான். முந்தி கடவுள் செய்த சகாயத்தைப்பற்றி ராஜா எவ்வளவு சந்தோஷப்பட்டானே இப்பொழுது அவ்வளவு சஞ்சலப் பட்டான். ஏனெனில் அவன் செய்த திரளான பாவங்கள் அவன் மனதுக்கு வந்தன. அவைகள் அவன் மனச்சாட்சியைக் குத்தின. அவைகள் எப்படிப்பட்டவை? எசேக்கியா திருட்டு, கொள்ளை, கொலைபாதகம், விபசாரம் முதலிய பாதகங்களுக்குட்பட்டவனாய் இருந்தானா? இல்லையே; எசேக்கியா அதிக பக்தியுள்ள மனுஷன். அவன் தன் கடவுளாகிய ஆண்டவரிடம் அதிக அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளின்படி நடந்தவன். அவனுக்கு மலைபோல் தோன்றின இந்தப் பாவங்கள் எவை? ராஜாவின் இருதயத்தைச் சஞ்சலப் படுத்தும் பாவங்கள் அவன் செய்த அநேக "சிறிய பாவங்களே". கடவுளின் சந்நிதானத்தில் எந்த "சின்னஞ் சிறு பாவமும்" பெரிய பாவமாகும் என்று எசேக்கியாவுக்குத் தெரிந்தது. சின்னஞ் சிறு குற்றமும் நம்மைக் கடவுளின் நித்தியாக்கினைக்குப் பாத்திராக்கும் என்று அவன் உணர்ந்துகொண்டான். இந்தப் பாவங்கள் ராஜாவை அழிவின் குழியில் தள்ளுவதற்குப் போதுமானவை.

எசேக்கியாவின் அனுபவம் அநேக கிறிஸ்தவர்களுக்கு உண்டு. பாவங்களைப்பற்றிப் பயப்படுவதற்கு ஒருவன் பெரும் பாவியாயிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நாம் தினந்தோறும் மனஸ்தாபத்தோடும் விசுவாசத்தோடும் பாவமன்னிப்புக்காக மன்றாடுவோமாக. அப்படிச் செய்தால் நாம் பாவமன்னிப்பைப்பற்றி நிச்சயமாயிருக்க முடியும்.

ஞா. பா. 419

# செவ்வாய்க்கிழமை

## நல்ல மேய்ப்பராகிய கிறிஸ்து

எசா. 40, 11 : "மேய்ப்போனைப்போல தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது கரத்தினால் சேர்த்துத் தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்"

பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் சொல்லியிருக்கிறது போல் கிறிஸ்து இங்கே நல்ல மேய்ப்பராக முன்னறிவிக்கப்படுகிறார். இந்த இனிய உவமையில் அவர் நமது அன்புள்ள இரட்சகராக நன்கு விளங்குகிறார், மேய்ப்பனைப்போல் தமது மந்தையை மேய்ப்பார் என்னும் வாக்குத்தத்தம் எவ்வளவோ இனிமையானது. அவருடைய மந்தை அவரை விசுவாசத்தில் ஏற்றுக்கொண்டு அவருடைய சத்தத்தைக் கேட்கும் ஆடுகளே. இவைகளை அவர் தெய்வ வசனமாகிய புல்லுள்ள இடங்களில் நடத்தி இவைகளின் ஆத்மரட்சிப்புக்கு அவசியமானதெல்லாவற்றையும் அளிக்கிறார். நல்ல மேய்ப்பன் கையிலிருந்து இவ்வாடுகளைப் பறித்துக்கொள்ளும் எதிராளிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். மேய்ப்பன் ஆடுகளுக்காகச் சிரத்தை எடுத்துக்கொள்ளாவிட்டால் அவைகளின் நிலைமை பரிதபிக்கப்படத்தக்கதாகும். ஆனால் அவர் நரகத்தின் ஒலிமுகவாசல்கள் அவைகளை மேற்கொள்ளாதபடி வல்லமையோடு காப்பாற்றுகிறார். மேலும் "ஆட்டுக் குட்டிகளைத் தமது கரத்தினால் சேர்த்துத் தமது மடியில் சுமப்பார்" என்னும் வாக்குத்தத்தம் எவ்வளவோ இனிமையானது. இதன் அர்த்தம் என்னவெனில், பிள்ளைகளையும் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களையும் ஏற்றுக்கொண்டு கவனிப்பார் என்பதே; இவர்களெல்லாரையும் மருளவிழாதபடி காப்பாற்றி இவர்கள் விசுவாசத்தில் பலங்கொள்ளும்படி இவர்களை வழிநடத்துவார். கடைசியில் "கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" என்னும் வாக்குத்தத்தம் எவ்வளவோ இனிமையானது. இதன் கருத்தாவது: விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய்த் தமக்கு இன்னும் அநேக பிள்ளைகள் பிறக்கும்படி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டவர்களை அவர் உன்னதத்திலிருந்து வரும் பலத்தால் ஆசீர்வதிப்பார்.

இது நல்ல மேய்ப்பரைப்பற்றிய வாக்குத்தத்தம். இந்நாள் வரைக்கும் இந்த வாக்குத்தத்தம் எவ்வளவு சிறப்பாய் நிறைவேறி வந்திருக்கிறது! நாமெல்லாரும் இந்த நல்ல மேய்ப்பரின் ஆடுகளாயிருந்து இவருடைய பராமரிப்பின் கீழ்ப் பிழைத்து நித்திய ஜீவனுக்குச் செல்லும் வழியில் நடப்போமாக.

ஞா. பா. 137

# புதன்கிழமை

## கடவுளின் நேர்மையும் சத்தியமும்

ஏசா. 54, 10: "மலைகள் விலகினாலும் குன்றுகள் அசைந்து போனாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை அசையாமலுமிருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற யேகோவா சொல்லுகிறார்"

நமது இருதயங்களில் எந்தச் சந்தேகமும் இராதபடி நாம் எப்போதும் நமது மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய பொன் வாக்கியம் இது. தம்முடையவர்களிடம் கடவுள் காட்டும் மாறாத நேர்மையும் சத்தியமும் இதிலே எவ்வளவோ சிறப்பாய் விளங்குகிறது. கடவுள் நமக்கு வாக்களிப்பதெல்லாம் கன்மலையைப்போல் உறுதியாய் நிற்கிறது. அவருடைய வார்த்தை நேர்மையானது, தாம் சொன்னதையெல்லாம் அவர் உண்மையாகவே நிறைவேற்றுவார். ஆனால் ஒரு விஷயத்தில் அவர் விசேஷமாய் நேர்மையுள்ளவர். இது நமது வாக்கியத்தின்படி அவர் தம்முடையவர்களோடு செய்த சமாதானத்தின் உடன்படிக்கையே. இது அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கடவுளோடு அடைந்த சமாதானம். நாம் நமது ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசம் வைத்தால் கடவுள் நம்மோடு சமாதானம் பண்ணுகிறார், அவர் நம்மோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார். இந்தச் சமாதான உடன்படிக்கை எதினாலும் அசைக்க முடியாதபடி நிலைநிற்கிறது. மலைகளும் குன்றுகளும் பூமியில் எல்லாவற்றிலும் நிரந்தரமான வஸ்துக்களென தோன்றுகின்றன; ஆனால் கடவுள் நம்மோடு செய்த உடன்படிக்கை விலகிப்போகாததற்குமுன் இவைகள் அசைந்து விலகிப்போம். கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாமும் அதிகமாய்ப் பாவஞ் செய்தாலும் கடவுளின் விஷயத்தில் அவருடைய உடன்படிக்கை நிலைத்தே யிருக்கிறது. நாம் மனஸ்தாபப்பட்டால் நம்மேல் மனதுருகுகிற கடவுள் தமது கிருபையோடுகூட நம்மருகே இருக்கிறார்.

இந்த வாக்கியத்தினால் நாம் கடவுளுடைய நேர்மையையும் சத்தியத்தையும் அறிந்துகொள்வோமாக. மனமாறுகிற மனுஷனல்ல, கடவுள் தாமே இங்கே நமக்கு வாக்களிக்கிறார். நாம் அவர் பேரில் மனப்பூர்வமாய் நம்பிக்கை வைக்கவேண்டாமா? அவர் ஒருபோதும் தமது உடன்படிக்கையை மீறமாட்டார்.

ஞா. பா. 293

# வியாழக்கிழமை

## கிறிஸ்தவர்களின் சந்தோஷம்

எசா. 61, 10: "யெகோவாவுக்குள் மிகவும் மகிழுகிறேன், என் கடவுளுக்குள் என் ஆத்துமாகளிகூருகிறது.... அவர் இரட்சணியம் என்னும் வஸ்திரத்தை எனக்கு உடுத்தி, நீதி என்னும் அங்கியை எனக்குத் தரிப்பித்தார்"

அதிருப்தியாயிருப்பதும் எப்பொழுதும் வியாகுலப்படுவதும் கிறிஸ்தவ விசுவாசத்தோடு ஒத்திராத காரியங்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பது கிறிஸ்தவ விசுவாசத்தில் ஒரு விசேஷமான பங்கு. இந்தச் சந்தோஷம் எப்பொழுதும் ஆரவாரத்தில் வெளிப்படாது; சில சமயங்களில் கிறிஸ்தவர்களுக்கு வெறுங் கவலையும் சஞ்சலமும் இருக்கிறதுபோல் தோன்றுகிறது. ஆனால் கிறிஸ்தவ சந்தோஷம் ஒருக்காலும் கிறிஸ்தவனுடைய இருதயத்தை விட்டுப் போகாது. என்? நமது வேதவாக்கியத்தைப் பாருங்கள். அதில் மெய்ச் சபை "யெகோவாவுக்குள் மிகவும் மகிழுகிறேன், என் கடவுளுக்குள் என் ஆத்துமா களிகூருகிறது" என்று பாடுகிறது. இந்தச் சந்தோஷத்திற்குக் காரணம் என்ன? "அவர் இரட்சணியம் என்னும் வஸ்திரத்தை எனக்கு உடுத்தி, நீதி என்னும் அங்கியை எனக்குத் தரிப்பித்தார்." இதைவிடச் சந்தோஷத்திற்குச் சிறந்த ஏவுதற்காரணம் இருக்கக்கூடுமா?

கிறிஸ்தவன் கடவுளுடைய நேசபிள்ளை. கடவுள் அவனிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கி, அவனுடைய எல்லாப் பாவங்களையும் அவனுக்கு மன்னித்து, தமக்கு முன்பாகச் செல்லும் நீதியை அவனுக்குக் கொடுத்திருக்கிறார். நித்திய இரட்சிப்பை எதிர்பார்க்கும் நிச்சயமான நம்பிக்கையோடு அவன் சாகுமட்டும் அவர் அவனிடத்தில் உண்டாக்கின விசுவாசத்தை அவனிடத்தில் காத்துவருகிறார். இந்த இரட்சிப்பினிமித்தம் கிறிஸ்தவன் சந்தோஷப்படவேண்டாமா? இப்படியிருக்க, நாம் எப்படி இலௌகிக காரியங்களைப்பற்றி அதிக விசனமாயிருந்து இருதயத்தின் சந்தோஷத்தை இழந்துபோகக் கூடும்? எல்லாவற்றிலும் பெரிய உபத்திரவத்திலும் கிறிஸ்தவன் சந்தோஷத்தோடு கடவுளை நோக்கி: "என்னுடையோர் நீர், கர்த்தாவே; உம்மையே நெஞ்சிலே பற்றினேன், பத்தாவே" என்று சொல்லுவான.

ஞா. பா. 502.

# வெள்ளிக்கிழமை

## தேவ துதிக்கேதுவாகிய மனந்திரும்புதல்

எரே. 31, 18: "நீர் என்னைத் திருப்பும் அப்பொழுது திரும்புவேன்; நீரே என் கடவுளாகிய யேகோவா"

மனந்திரும்புதலாவது என்ன? பாவத்தினால் கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட ஒரு பாவி தெய்வீக நியாயப்பிரமாணத்தினால் தன் பாவத்தை அறிந்து அதற்காக உண்மையாய் விசனப்பட்டு விசுவாசத்தில் தன் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவிடந் திரும்புவதே மனந்திரும்புவதாகும். அறிவும் விசனமும் விசுவாசமும் மனந்திரும்புதலுக்கு அவசியமானவை. பாவத்தைப்பற்றி விசனமில்லாத மனந்திரும்புதல் கிடையாது. ஆனால் வெறும் விசனம் போதாது. அதோடு மெய் விசுவாசமும் கிறிஸ்துவுக்குள் கடவுளின் கிருபையைப்பற்றிய நிச்சயமான நம்பிக்கையும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசமிருந்தால் மனிதன் மனந்திரும்பியிருக்கிறான். கடவுள் அவனுடைய எல்லாப் பாவங்களையும் அவனுக்கு மன்னித்து அவனைத் தம்முடைய பிள்ளையும் நித்திய ஜீவனின் சுதந்தரனும் ஆக்குகிறார்.

இந்த மனந்திரும்புதல் வெகு சிறந்த கிரியை. இந்தக் கிரியை உன்னத கடவுளின் கிரியையே. "நீர் என்னைத் திருப்பும் அப்பொழுது திரும்புவேன்" என்று நமது வேதவாக்கியம் சொல்லுகிறது. மனந்திரும்புமுன் மனிதன் ஆத்மீகப் பிரகாரமாகச் செத்தவனாயிருக்கிறான். சரீரப் பிரகாரமாகச் செத்தவன் தன்னை உயிரோடெழுப்பிக்கொள்ள முடியாததெப்படியோ அப்படியே ஆத்மீகப் பிரகாரமாகச் செத்தவன் கடவுளிடமிருந்து வரும் நித்திய ஜீவனைத் தனக்கு அளித்துக்கொள்ள முடியாது. இதைக் கடவுள் மாத்திரம் தமது சர்வவல்லமையினால் செய்ய முடியும். மனுஷர் விசுவாசிக்கவும் சித்தங்கொள்ளவும் உழைக்கவுஞ் செய்கிறவர் அவரே.

உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகிய நம்மிடத்திலும் அன்புள்ள கடவுள் மனந்திரும்புதலை உண்டாக்கியிருக்கிறார். அதற்காக நாம் அவருக்கு மனமார்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள். அவர் நம்மையே தெரிந்தெடுத்து நமக்கே நித்திய ஜீவனின் ஆறுதலையளித்தது நம்மைத் துதிக்க எவ்வளவு அதிகமாய் ஏவிவிட வேண்டியது! உண்மையும் நித்தியமுள்ள கடவுளுக்கு மகிமையும் துதியும் வணக்கமும் உண்டாவதாக!

ஞா. பா. 299

## சனிக்கிழமை

### கடவுள் தம்முடையவர்களிடங்கொள்ளும் அநாதி அன்பு

எரே. 31, 3: "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் கிருபையாய் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்"

இந்த அருமையான வாக்கியத்தில் உன்னத கடவுள் விசுவாசத்தினால் தமது பிள்ளைகளானவர்களுக்குத் தமது உள்ளான தன்மையை வெளிப்படுத்துகிறார். நம்மை அவரண்டை இழுப்பது அவருடைய அனலான சிநேகமும் முடிவற்ற கிருபையுமே. அவர் அநாதி சிநேகத்தாலே அதாவது நித்திய காலமாக நம்மைச் சிநேகித்தார்; அவர் நித்திய காலமாக அன்புள்ளவராய் நமது சரீர நன்மையைப் பற்றியும் ஆத்மீக நித்திய வாழ்வைப்பற்றியும் ஆலோசனை பண்ணினார். காலத்திலேயும் அவர் தம்முடைய அளவற்ற அன்பை நம்மேல் வருஷிக்கிறார். அவர் மறுஜனன முழுக்காகிய பரிசுத்த ஞானஸ்நானத்தினால் நம்மை ஜென்மப் பாவத்தின் கேட்டிலிருந்து இரட்சித்துத் தமது நேச குமாரனின் நீதியாகிய வெண்வஸ்திரத்தை நமக்கு உடுத்தி நம்மைத் தமது நேச பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். இதைவிட அவர் இன்னும் அதிகமாய்ச் செய்திருக்கிறார். அவர் நம்மைத் தமது உண்மையுள்ள கரத்தினால் தாங்கித் தமது வார்த்தையினால் நம்மைப் போஷித்து நாம் மருள விழாதபடி காப்பாற்றினார். நாம் சில சமயங்களில் சருக்கி விழுந்தபோது அவர் நம்மைத் திரும்பத் தூக்கிப் பிசாசின் சோதனைகளிலிருந்து காப்பாற்றி மரணபரியந்தம் நம்மை இரட்சிக்கும் விசுவாசத்தில் பராமரிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். அதோடு அவர் நம்மைச் சரீரப் பிரகாரமாகப் பராமரித்து நம்மை உடுத்தி நமக்கு ஆகாரத்தையும் மனதைக் களிப்பிக்கும் அநேக இன்பங்களையும் அளித்திருக்கிறார்.

ஆ, நமது உண்மையுள்ள கடவுள் நம்மிடத்தில் பாராட்டின இந்த அன்பு எவ்வளவு பெரிது! கிறிஸ்தவர்களாகிய நாம் ஏழைப் பாவிகள் என்பதை நினைத்தால், இந்த அன்பு நம்மை எவ்வளவோ துதிக்கு ஏவிவிடும். இந்த அன்பை நாம் நாளுக்குநாள் இன்னும் நன்றாய் அறிந்து நம்மைச் சிநேகித்தவரை நாளுக்குநாள் இன்னும் அதிகமாய்ச் சிநேகிக்கக் கடவுள் தாமே துணை செய்வாராக!

ஞா. பா. 208

## கடவுள் மனுஷரிடங் கொள்ளும் கிருபையுள்ள சித்தம்

ஏசா, 33, 11: யேகோவாவாகிய ஆண்டவரின் திருவாக்கு இது: என் ஜீவன்மேல் ஆணை, நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல் துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன்"

மனுஷரில் அநேகர் மனந்திரும்பாது இரட்சிப்படையாமற் போவதற்குக் காரணம் என்ன? கடவுள் அவர்களுடைய இரட்சிப்பைப்பற்றி அக்கரையற்றவராயிருப்பதோ? இல்லவே இல்லை. கடவுள் எல்லா மனுஷருடைய இரட்சிப்பையும் விரும்புகிறார். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்று விரும்புகிறார். நமது வேதவசனத்தில் அவர் தாம் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல் துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புவதாக ஆணையிட்டுச் சொல்லுகிறார். துன்மார்க்கன் நியாயமாய்ச் சம்பாதித்தது நரகாக்கினையே, ஏனெனில் அவன் கடவுளின் வழிகளில் நடக்காமல் தன் மனம் போனபோக்கெல்லாம் நடக்கிறான். ஆனால் அவன் நியாயமாய்க் கடவுளின் நீதியின்படி தண்டிக்கப்படவேண்டும். ஆனால் கடவுள் வெறும் நீதியுடையவர் மாத்திரமல்ல; அவர் அன்பும் கிருபையுமுள்ளவர். அவர் பாவத்தின்மேல் கோபம் வைத்தாலும் பாவிகளின் மேல் கோபம்வையாமல் அவர்களைச் சிநேகித்து அவர்களோடு ஒப்புரவாகும்படி தமது நேசகுமாரனை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார் அவர் பாவிகளின் மரணத்தை விரும்புகிறதில்லை. பாவிகள் நித்தியகேட்டிற்குட்படுவது அவர்களுக்குப் பிரியத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கிறதில்லை; ஆம், துன்மார்க்கன் தம்முடைய வசனத்திற்குச் செவிகொடாமல் தனக்கு நித்திய மரணத்தைச் சம்பாதித்துக்கொண்டால், கடவுள் விசனப்படுகிறார். இதுதான் கடவுள் பாவிகளுக்காகக் கொள்ளும் சிந்தை. அவர் பாவி "தன் வழியைவிட்டுத் திரும்பிப்பிழைப்பதையே விரும்புகிறார்." துன்மார்க்கன் தன் பாவத்திற்காகப் பயப்பட்டு அதற்காக விசனப்பட்டுத் தமது கிருபையுள்ள கரத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டு தன் துன்மார்க்கத்தைவிட்டுவிட வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். இது கடவுளின் கிருபையுள்ள சித்தம்.

ஞா. பா. 421.

# திங்கட்கிழமை

## மரித்தோர் ஜீவிப்பார்கள்

தானி. 12, 2: "பூமியின் தூளிலே நித்திரை செய்யும் அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கென விழித்தெழுந்திருப்பார்கள்"

"மாம்ச உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிக்கிறேன்." நமது விசுவாசப்பிரமாணத்தின் மூன்றாம் பிரிவிலுள்ள இவ்வார்த்தைகளினால் நாம் சத்திய வேதத்தின் சிறந்த போதனைகளில் ஒன்றை அறிக்கையிடுகிறோம். மாம்ச உயிர்த்தெழுதலில்லாவிட்டால் கடவுள் மனுஷரை வீணாகச் சிருஷ்டித்திருப்பார்; கிறிஸ்து வீணாக நமக்காகச் சிலுவையில் மரித்திருப்பார்; நமது முழுக் கிறிஸ்தவ விசுவாச அறிக்கையும் விருதாவாயிருக்கும். ஆனால் கடவுளுக்கு ஸ்தோத்திரம்! மரித்தோர் உயிரோடெழுந்திருப்பார்கள். இரட்சகர் பேரில் விசுவாசம் வைத்து இந்த ஜீவனை விடுகிறவர்களுக்கு இது அதிக ஆறுதலான நம்பிக்கை. மரணத்திற்கேதுவான நமது சரீரம் சாம்பலும் தூசியுமாய்ப் போனாலும், கிறிஸ்துவின் கடைசி எக்காளச் சத்தம் கேட்கும்போது இந்த ஜீவனில் உண்டாயிருந்த அதே சருமமும் அளவும் பாலும், சுருங்கச் சொன்னால் அதே ரூபமும் தன்மையுமுடையதாய்க் கல்லறையினின்று எழும் என்ற நம்பிக்கையை விடச் சிறந்த நம்பிக்கையுண்டா? அதுவரைக்கும் கடவுளின் மெய்ப் பாதுகாப்பில் நித்திய சமாதானத்தின் மாளிகைகளிலிருந்த ஆத்துமா அப்போது சரீரத்தோடு இணைக்கப்பட்டுக் கடவுளின் அழகிய மோட்சத்தில் பிரவேசிக்கும். இதைவிட இன்பமானதொன்று உண்டா? அப்போது நமது சரீரங்கள் சொல்லி முடியாத வண்ணம் எவ்வளவு அழகாய் விளங்கும்! அவைகள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போல் பிரகாசிக்கும், ஆம், அவைகள் இயேசு கிறிஸ்துவின் மகிமையடைந்த சரீரத்தைப்போல் இருக்கும். பரதீசின் வாசல்கள் திறவுண்டுபோக நாம் கடவுளை அவருடைய நித்திய சந்தோஷத்திலும் ஆனந்த வெளிச்சத்திலும் காண்போம். நித்திய ஜீவனுக்கென எழுந்திருப்பதற்குப் போதிய காரணமில்லையா? நாம் எல்லாரும் நமது ஆண்டவராகிய இரட்சகர்பேரிலுள்ள விசுவாசத்தில் நித்திய ஜீவனுக்கென எழுந்திருக்கக் கடவுள் தாமே கிருபை செய்தருள்வாராக.

ஞா. பா. 507

## நமது நீதியும் கடவுளின் இரக்கமும்

தானி. 9, 18: "நாங்கள் எங்கள் நீதியை நினைத்தல்ல உமது மிகுந்த இரக்கத்தை நினைத்தே எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்"

இந்த வாக்கியத்தினால் கடவுள் நமக்கு ஏதோ ஒன்றைக் கொடுக்கக் கடமைப்பட்டவராயிருக்கிறாப்போல் நாம் அவரிடம் வந்து நமது நீதியைப் பாராட்ட முடியாதென்று அறிந்துகொள்ளுகிறோம். நமது நீதி எப்படிப்பட்டது? வேதம் சொல்லுகிறபடி அது கறைப் பட்ட வஸ்திரம் போலிருக்கிறது. நாம் எவ்வளவோ நல்லொழுக் கத்தோடு ஜீவித்தாலும், எத்தனையோ நன்மைகளைச் செய்தாலும் எவ்வளவோ பக்தியோடு இருந்தாலும், இவை எல்லாவற்றிலும் பாவம் ஒட்டியே இருக்கிறது. சகல கன்மப் பாவங்களுக்கும் விலகி இருந்தாலும் — இதுவோ அசாத்தியம் — செய்யவேண்டிய எத் தனையோ காரியங்களைச் செய்யாமற் போகிறோம். நெஞ்சிலே பொல் லாத நினைவுகளும் ஆசைகளும் தோன்றியிராத ஒரு மனுஷன் பூலோகத்தில் உண்டா? நற்கிரியைகள் என்னப்பட்ட செய்கைகளும் பாவத்தினால் கறைப்பட்டிருக்கின்றன. நமது நீதியைப்பற்றி இன்னமும் பேச இடமுண்டா? நாம் கெட்டுப்போய்ச் சபிக்கப்பட்ட பாவிகளேயன்றி வேறல்ல. நம்முடைய நீதி கடவுளுக்குமுன் செல்லவே செல்லாது. அதன்மேல் சார்ந்திருப்பது பயங்கரமான மூடத்தனம். கடவுளுக்குமுன் செல்லக்கூடிய ஒரே நீதியானது அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பரிபூரண நீதியே. இந்த நீதியைத் தமது கிருபையின்மேலும் இரக்கத்தின்மேலும் சார்ந் திருந்து அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும் எல்லாருக் கும் அளிக்கச் சித்தமாயிருக்கிறார். அப்படியானால் நமது சகல தப்பிதங்களையும் பலவீனங்களையும் குறைவுகளையும் அன்புள்ள கட வுள் முற்றிலும் காணாதபடி கிறிஸ்துவின் நீதி அவைகளை மூடுகிறது. கடவுள் விசுவாசத்தினால் நமக்குச் சொந்தமாயிருக்கிற கிறிஸ்துவின் நீதியைமாத்திரம் காண்கிறார். அதனால் தானியேல் எங்கள் விண் ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம், உமது மிகுந்த இரக்கத்தை நினைத்தே என்கிறார். கடவுளின் தெய்விக இரக்கத் தைப்பற்றி நாம் நிச்சயம் அடையும்படி கடவுளின் மிகுந்த இரக்கம் மாத்திரம் நம்மை நீதிமான்களாக்குகிறது என்று அவனுக்குத் தெரி யும். தன்னுடைய நீதியின்மேலல்ல, கடவுளின் இரக்கத்தின்மேல் சார்ந்திருக்கிற மனுஷன் பாக்கியவான்.

ஞா. பா. 299.

# புதன்கிழமை

## *நமது ஜெபம் எப்பொழுது நிச்சயமாய்க் கேட்கப்படும்?*

சங். 10, 17: யெகோவாவே, சிறுமையானவர்களின் விண்ணப்பத்தைக் கேட்டீர். அவர்கள் இருதயம் ஸ்திரமாகும்படி செய்தருளும். மத். 8, 2: ஐயனே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும். யோ. 16, 23: மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் பிதாவினிடம் கேட்டுக்கொள்வதெதுவோ அதை என் நாமத்தில் உங்களுக்குத் தருவார்.

நமது ஜெபம் கேட்கப்படும் என்று நாம் எப்பொழுது நிச்சயமாய் இருக்கலாம்? நமது ஜெபம் இருதயத்திலிருந்து வந்தால்தான். முதல் வேதவாக்கியம் "சிறுமையானவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறீர்" என்று சொல்லுகிறது. நமது ஜெபம் ஒரு விண்ணப்பமாய் இருக்கவேண்டும். நாம் கேட்கும் காரியத்தைக் கடவுள் கொடுக்க வேண்டும் என்னும் மெய்யான ஆவல் நமக்கு இருக்கவேண்டும். ஜெபிக்கும்போது நாம் வேறு காரியங்களைப்பற்றிச் சிந்தித்தால் நமது ஜெபம் வெறும் வாய் ஜெபமாயிருக்கும். அப்படிப்பட்ட ஜெபம் கேட்கப்படமாட்டாது. ஜெபிக்கும்போது நாம் முழு மனதோடும், கடவுள் நமது ஜெபத்தைக் கேட்பார் என்னும் நிச்சயத்தோடும் ஜெபிக்கவேண்டும். நமது ஜெபம் கேட்கப்படுமோ இல்லையோ என்று சந்தேகங்கொள்வது கடவுளை அவமானப்படுத்தும் பாவமாம்.

மேலும் இரண்டாவது வேதவாக்கியத்தின்படி, நாம் கேட்கிற விண்ணப்பத்தைக் கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தவேண்டும். சில சமயங்களில் நாம் நம்முடைய நன்மைக்கேதுவாயிராத காரியங்களுக்காக ஜெபிக்கிறதில்லையா? அதனால் நாம் ஜெபிக்கும்பொழுது, ஜெபத்தைக் கேட்கும் விதத்தை நாம் கடவுளுக்கு அறிவிக்காமல் எல்லாவற்றையும் அவருடைய ஞானத்திற்கு ஒப்புவிப்போமாக. நமது நன்மைக்கும் தீமைக்கும் எதுவானவைகள் அவருக்கே தெரியும். அதனால் நாம் இலௌகீக நன்மைகளுக்காக ஜெபிக்கும்பொழுது "உமக்குச் சித்தமானால்" என்று ஜெபிப்போமாக. ஆத்மீக நன்மைகளுக்காகக் கேட்கும்பொழுது அவர் அவைகளைக் கொடுப்பார் என்று நமக்குத் தெரியும்.

கடைசியில் மூன்றாவது வாக்கியத்தின்படி, நமது ஜெபம் இயேசு நாமத்தில் செய்யப்படவேண்டும் அதாவது நாம் இயேசுவை விசுவாசித்து ஜெபிக்கவேண்டும். விசுவாசமற்ற மனுஷன் தன் ஜெபம் கேட்கப்படும் என்று ஒரு நாளும் நிச்சயத்தோடு சொல்ல முடியாது. விசுவாசமுள்ள தேவ பிள்ளையோ ஜெபத்தின் நிறைவேறுதலுக்கு எதிர்பார்ப்பான்.

ஞா. பா. 56

## மனந்திரும்புதலுக்கேதுவான தேவசிட்சை

ஓசேயா. 6, 1: யெகோவாவிடம் திரும்புவோம் வாருங்கள், நம்மைப் பீறினவர் அவரே, நம்மைக் குணமாக்குகிறவரும் அவரே; நம்மை அடித்தவர் அவரே, நமது காயங்களைக் கட்டுகிறவரும் அவரே.

மற்றெந்த ஜனத்தையும்விட இஸ்ரவேல் ஜனம் கடவுளின் கிருபையை அனுபவித்திருந்தது. அதன் இராஜ்யம் பூலோகராஜ்யங்களில் பெரியதாயிருந்தது. அதன் இராஜாக்கள் பூலோக ராஜாக்களில் பெயர்போனவர்கள். அதன் எதிராளிகள் அதை மேற்கொள்ளப்பார்த்தும், அதற்குத் திரும்பத் திரும்பக் கடவுள் சகாயமாக நின்றார். யூதஜனம் சுகவாழ்வு நடத்திவந்தது. ஆனால் யூதர்கள் இதெல்லாவற்றையும் நன்றியறிதலோடு பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் சுகவாழ்வு கடவுளின் பிரியத்திற்கு ஓர் ஈடு என்று நினைத்து அவருடைய கிருபையைப்பற்றி ஏனோதானோ என்று இருந்து பல பாவங்களுக்கு ஆளானார்கள். அதனால் கடவுள் அவர்களைச் சிட்சிக்க அவசியமாயிருந்தது. இராஜ்யத்தில் இங்குமங்கும் அநேக பிரிவினைகள் உண்டாயின. யுத்தங்களும் கலகங்களும் தோன்றின. அன்னிய தேசத்து இராஜாக்கள் தேசத்தைப் பிடிக்க வந்தார்கள். கடைசியில் ஜனத்தின் பெரும்பாகம் சிறையாகக் கொண்டுபோகப்பட்டது. ஓசேயா தீர்க்கதரிசி இந்தக் கஷ்டங்களெல்லாம் வரக்கண்டு இஸ்ரவேல்ஜனத்தை மனந்திரும்புதலுக்கு அழைத்தான்.

நமக்கும் நமது தேசத்தாருக்கும் கடவுள் அநேக நன்மைகளை அருளியிருக்கிறார். இதுவரைக்கும் கலகமும் யுத்தமும் நம்மை அணுகாதபடி காப்பாற்றியிருக்கிறார். ஆனால் நாம் நமது ஆத்ம நன்மையைப்பற்றி ஏனோ தானோ என்று இருக்கலாமா? கடவுள் நம்மைத் தம்மண்டை இழுக்கும்படி நம்மைத் தண்டிக்க அவசியம் ஏற்படுமா? நாளுக்கு நாள் உலகத்தில் கஷ்டம் அதிகரிக்கிறது. நாளுக்கு நாள் மற்ற தேசங்களில் இப்பொழுது இருக்கிற கஷ்டங்கள் நம்மையும் அணுகுகின்றன. இது கடவுளுடைய கிருபையின் அழைப்பு. அவர் நம்மைக் குணமாக்க விரும்புகிறார். அவருடைய கிருபையை அசட்டை செய்யாமல் இருப்போமாக. அவருடைய அன்பின் சிட்சையைப் பொறுமையாய் ஏற்றுக்கொண்டு அவரிடத்தில் திரும்புவோமாக. அவர்: "நான் உன் ஆரோக்கிய கர்த்தர்" என்று சொல்லுகிறார்.

ஞா. பா. 49.

27359

# வெள்ளிக்கிழமை

## நமது தீர்க்கதரிசியாகிய இயேசுகிறிஸ்து

### ஏசா. 61, 1. 2: ....... அவர் என்னை அனுப்பினார்

இவ்விடத்தில் நமது இரட்சகர் தாம் தீர்க்கதரிசியாகச் செய்யப்போகும் ஊழியத்தைப்பற்றிப் பேசுகிறார். தாம் சொன்னபடி தமது ஊழியத்தை எவ்வளவோ சிறப்பாக நிறைவேற்றினார். ஒரு தீர்க்கதரிசி தெய்வீக இரகசியங்களைப் பிரசங்கிக்கிறவனும் பிரஸ்தாபிக்கிறவனுமாம். இயேசு அப்படிப்பட்டவராக விளங்கினார். அவர் அளவில்லாமல் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டுக் கடவுள் தமது இரட்சிப்பைப்பற்றிச் செய்த ஆலோசனையை நமக்கு வெளிப்படுத்தினார். அவர் மாத்திரமே அதைச் செய்யக்கூடும். கிறிஸ்து அதை நமக்கு வெளிப்படுத்தியிராவிட்டால் ஒரு மனுஷனுக்கும் அது தெரியாது. இவ்வாறு அவர் மூன்று வருஷகாலம் பிரசங்கித்து உபதேசித்துத் தமது போதனையை அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தினார். பாவிகளை மனந்திரும்ப ஏவும்படி அவர் நியாயப்பிரமாணத்தை அதிக உறுதியோடு பிரசங்கித்தார். என்றாலும் அவருடைய விசேஷித்த வேலை அருமையான சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே. தாம் பாவிகளை இரட்சிக்க வந்த தேவகுமாரனும் உலக ரட்சகரும் என்று அவர் திரும்பத் திரும்பத் தம்மைக் காட்டினார். இப்படி அவர் வாஸ்தவத்தில் யெகோவாவின் அனுக்கிரக வருஷத்தைப் பிரசங்கித்துத் துயரப்பட்ட அனைவரையும் தேற்றிப் பிசாசினாலும் பாவத்தினாலும் சிறைப்பட்டவர்களை விடுதலைசெய்தார்.

இவ்விதமாக இயேசுகிறிஸ்து தமது தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றும்போது அவர் ஒரேதரமாக மனுஷனுக்கு இரட்சிப்பை அடையும் வழியைச் சொன்னார். இன்றைக்கும் அவர், காலமுடிவு வரைக்கும் வசனத்தின் ஊழியத்தை ஸ்தாபித்துத் தமது வசனத்தின்மூலமாய்க் கிரியை நடப்பித்து வருகிறார். அவருக்குத் துதி நித்தியகாலமாய் உண்டாயிருப்பதாக.

ஞா. பா. 8.

## சனிக்கிழமை

### நமது பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து

எபி. 7 26: பக்தரும் கபடற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளினின்றும் பிரிக்கப்பட்டவரும் வானங்களிலும் மேலாக உயர்த்தப்பட்டவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவர்.

நமது இரட்சகர் நமது தீர்க்கதரிசி மாத்திரமல்ல, நமது பிரதான ஆசாரியருமாய் இருக்கிறார். இதன் கருத்து மிக மேன்மையானது. நித்திய காலமாக அவர் நமது ஆதிப்பிதாக்கள் பாவத்தில் விழுவதைக் கண்டு அவர்கள் மூலமாக எல்லா மனுஷரும் கடவுளின் கோபாக்கினைக்கும் தெய்வீக நியாயப்பிரமாணத்தின் தண்டனைக்கும் ஆளாவார்கள் என்று முன்னறிவித்தார். அப்போதே அவர் நமது பதிலாளாகி நாம் செய்ய முடியாததையெல்லாம் நமக்குப் பதிலாகச் செய்யத் தீர்மானித்தார். அப்படிப்பட்டவராக அவர் மாம்சத்தில் உற்பவித்த பின்பு நியாயப்பிரமாணத்தை நமக்குப் பதிலாகப் பரிபூரணமாய்க் கைக்கொண்டு இவ்வாறு தமது பரம பிதாவுக்குக் கீழ்ப்படிந்தவரானார். இதைவிட இன்னும் அதிகமாகவே செய்தார். தெய்வீக நியாயப்பிரமாணத்தை நாம் மீறினதினால் நம்மேல் சாபம் வந்ததினால் நமது பாவங்களை யெல்லாம் தமது கணக்கில் வருவித்துக்கொண்டு வாதைப்படவும் முள்முடி சூட்டப்படவும் சிலுவையில் அறையப்பட்டு வேதனையுள்ள மரணமடையவும் இசைந்தார். இவ்விதமாக அவர் நமது பாவங்களினிமித்தம் நம்மேல் வந்திருந்த சாபத்தைத் தீர்த்தார். அவர் தமது பிதாவுக்குச் சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்திருந்ததினால் நமது பாவத்துக்கெல்லாம் ஈடு செலுத்தித் தமது பரிபூரண பலியினால் நித்திய மீட்பை உண்டு பண்ணினார். இதைவிட அதிகமாயும் செய்கிறார். தாம் உயர்த்தப்பட்டபின்பு அவர் பிதாவினிடம் நமக்காகப் பரிந்துபேசிப் பிசாசு நியாயப்பிரமாணம் இவைகளின் குற்றச்சாட்டிற்கு நம்மைப் பாதுகாக்கிறார்.

இது கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைப்பற்றிய ஆறுதலான போதனை. நமது இரட்சகரின் அன்பை நாம் போற்றவேண்டாமா?

ஞா. பா. 203.

## ஞாயிற்றுக்கிழமை

### நமது இராஜாவாகிய இயேசு கிறிஸ்து

சங். 2, 6. 8: நானே சீயோனில் எனது பரிசுத்த பர்வதத்தில், என் இராஜாவை ஏற்படுத்தினேன் என்கிறார். என்னிடம் கேளும், ஜாதிகள் உமது சுதந்தரமாகவும் பூமியின் கடைமுனை வரையுமுள்ளதை உமது காணியாட்சியாகவும் கொடுப்பேன்.

இந்த இராஜா யார்? நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான். அவர் ஜாதிகளைச் சுதந்தரமாகவும் முழு உலகத்தையும் காணியாட்சியாகவும் அரசாளும்படி கடவுள் அவரை இராஜாவாக ஏற்படுத்தினார். அவர் இராஜாவானார். உலகத்தில் மிகுந்த பராக்கிரமமுள்ள இராஜாக்களும் அவருக்குச் சாம்பலும் தூசியுமாயிருக்கும்படி அவ்வளவு பெரிய இராஜாவானார். தேவமனுஷனாகிய அவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமது வல்லமையுள்ள கரத்தினால் அவர் எல்லாத் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் வல்லமைகளையும் கர்த்தத்துவத்தையும் இந்த யுகத்தில் மாத்திரமல்ல, இனி வரும் யுகங்களிலும் பெயர் பெற்றவராக அரசாளுகிறார். இது நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையின் இராஜ்யம். அவருக்கு ஒரு கிருபையின் இராஜ்யமும் உண்டு. இது அவரை விசுவாசிக்கிறவர்களின் கூட்டமாகிய பூலோகத்திலுள்ள திருச்சபை. இவர்களை அவர் மனுஷ ஜாதியின் திரளிலிருந்து தெரிந்துகொண்டு தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு ஒருவனும் அவர்களைப் பறித்துக்கொள்ளாதபடி தமது அன்பின் கரத்தினால் அவர்களை அணைத்துக்கொள்ளுகிறார். தினந்தோறும் அவர்களுக்கு அவர்கள் பாவங்களை மன்னித்து அவர்களை விசுவாசத்தில் பலப்படுத்துகிறார். அவர்களைச் சிட்சிக்கவும் செய்கிறார், ஆனால் அவருடைய பிதாவடைவான அன்புக்கும் உண்மைக்கும் அளவில்லை. இப்பூலோகத்தில் அவர்கள் காலம் முடிவாகும் போது அவர் அவர்களைத் தமது மகிமையின் இராஜ்யமாகிய மோட்ச மாளிகைக்கு வழி நடத்துகிறார். அவ்விடத்தில் அவர்கள் முடிவற்ற சந்தோஷத்தோடும் ஆனந்தத்தோடும் அவரோடு இருப்பார்கள்.

இவரை நமது சிறந்த இராஜாவாக ஏற்றுக்கொண்டு இவருக்கு ஆனந்தத்தோடு ஊழியஞ் செய்வோமாக! இந்த இராஜாவை ஆண்டவராக உடையவன் பாக்கியவான்.

ஞா. பா. 127.

## திங்கட்கிழமை

### தேவதுதிக்கு ஏதுவாயிருக்கும் கிறிஸ்தவர்களுடைய நடத்தை

மத். 5, 16: மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது

இங்கே ஆண்டவராகிய கிறிஸ்து தமது கிறிஸ்தவர்களைப் பார்த்துப் பேசுகிறார். இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் அறிந்துகொள்ளும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களில் விசுவாசத்தின் "வெளிச்சத்தை" ஏற்றியிருக்கிறார். இந்த விசுவாசம் சுபாவத்தினால் இருண்டுபோன அவர்கள் இருதயங்களைப் பிரகாசிப்பித்திருக்கிறது. இது அவர்களுடைய ஜீவியத்தில் விளங்க வேண்டும். பிரகாசிக்காத வெளிச்சம் கிடையாது. அதேவிதமாக விசுவாசத்தின் வெளிச்சம் தன் கிரணங்களை வீசுகிறது. அவைகள் விசுவாசத்தில் உற்பத்தியாகும் நற்கிரியைகளே. விசுவாசம் எவ்வளவு பலமாயிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய் நற்கிரியைகள் வெளிப்படும். அதனால் ஒரு கிறிஸ்தவன் அந்தகாரத்தின் கிரியைகளாகிய பொறாமை, பகை, சண்டை, பெருந்தீனி, குடிவெறி முதலியவைகளை ஒழித்துவிடுகிறதுமன்றி அன்பு, தயாளம், சாந்தம், சமாதானம் முதலிய சகல நற்கிரியைகளையும் அப்பியசித்து வருவான். இவ்விதமாக ஒரு கிறிஸ்தவன் தன் வெளிச்சம் பிரகாசிக்கச் செய்வான். இதை அவன் மறைவில் மாத்திரமல்ல, கிறிஸ்தவர்கள் எவ்வளவோ அன்பும் சாந்தமுமுள்ளவர்கள் என்று உலகத்தார் காணும்படி உலகத்தாருக்கு முன்பாகவும் நற்கிரியைகளைச் செய்வான். கிறிஸ்தவர்களின் நற்கிரியைகளை உலகத்தார் ஆச்சரியத்தோடு பார்க்கத்தக்கதாக கிறிஸ்தவர்கள் அவைகளைப் பிரகாசிக்கிற ஒரு வெளிச்சம்போல எல்லாத் தேசங்களிலும் தெரியச் செய்வார்கள். உலகத்தார் கிறிஸ்தவர்களின் மாசற்ற ஜீவியத்தைக் கவனித்து அவர்கள் அந்தகாரத்தின் சகல கிரியைகளையும் ஒழித்துவிட்டு உலகத்தால் கறைப்படாதிருப்பதைப் பார்த்து அதன் காரணமின்னதென்று விசாரிப்பது நிச்சயம். அவர்கள் கிறிஸ்தவர்களின் நற்கிரியைகளைக் காணும்போது அவர்கள் வெறும் பெயர் கிறிஸ்தவர்களாயிராமல் வாஸ்தவத்தில் மெய்யான கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கிறார்கள் என்று அறிந்து கிறிஸ்துவினிடம் இழுக்கப்படுவார்கள். இவ்விதமாக அநேகர் கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் பண்ணப்பட்டுத் தங்களிடத்தில் இவ்வளவு பெரிய கிரியையை நடப்பித்த பரம பிதாவை மகிமைப்படுத்தியிருக்கிறார்கள்.

நமது வெளிச்சம் ஜனங்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கும்படி நடப்போமாக.

ஞா. பா. 302

## செவ்வாய்க்கிழமை

### கிறிஸ்தவர்கள் அவசியமாய் செய்யவேண்டிய அறிக்கை

**மத். 10, 32. 33:** மனுஷர்முன் என்னை அறிக்கை பண்ணுகிற வன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன் அறிக்கை பண்ணுவேன். மனுஷர்முன் எவனாகிலும் என்னை மறுதலிப்பானாகில் அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதா வின்முன் மறுதலிப்பேன்.

இங்கே நாம் கிறிஸ்தவ மார்க்கத்தின் விசேஷமான, சில சமயம் இரட்சிப்புக்கேதுவான காரியத்தைப்பற்றிக் கேட்கிறோம். இது ஆண்டவராகிய கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்தின் அறிக்கை. சகல சந்தர்ப்பங்களிலும் விசுவாசத்தை மனுஷருக்கு முன்பாகப் பகிரங்கமாயும் தாராளமாயும் அறிக்கையிடுவது இலேசான காரியம் அல்ல. தேவ பக்தியற்ற உலகத்தின் கிரியைகளில் சார்ந்திராததி னால் எத்தனையோ கிறிஸ்தவர்கள் உலகத்தாரின் நிந்தைக்கு ஆளாய் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவசியமாகும்போது கிறிஸ்த வர்கள் தங்கள் விசுவாசத்தை நிபந்தனையின்றி அறிக்கையிடுவது அவசியம். கிறிஸ்துவை அறிக்கையிடும் சந்தர்ப்பம் நேரிட்டால் கிறிஸ்தவர்கள் பின்வாங்கக் கூடாது. அறிக்கை பண்ணுவதை விலக்க ஒரு சிறிய குற்றத்தைச் செய்தால் பரவாயில்லை என்று சிலர் சொல்லுவார்கள். அப்படிப் பேசுகிறவனில் விசுவாசமே இல்லை. அவன் அறிக்கை செய்யவேண்டும் என்று விரும்புகிறவருடைய சித்தத்துக்கு நேர் விரோதமாய் நடக்கிறான். அவனைப்பற்றிக் கிறிஸ்து, "மனுஷர்முன் எவனாகிலும் என்னை மறுதலிப்பானாகில் அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்முன் மறுதலிப் பேன்" என்னும் பயங்கரமான தீர்ப்பைக் கூறுகிறார். அவன் மனஸ் தாபப்படாவிட்டால் நித்திய அழிவுக்கு ஆளாகிறான். இதற்கு மாறாக, "மனுஷர்முன் என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்முன் அறிக்கை பண்ணுவேன்" என்னும் வாக்குத்தத்தம் எவ்வளவோ அருமையா னது. ஆண்டவராகிய இயேசு தம்மை அறிக்கையிடுகிறவர்களை அரவணைத்துத் தமது பிதாவின் இராஜ்யத்தில் பிரவேசிக்கும்படி செய்வார் என்பது இதன் அர்த்தம்.

ஆம், கிறிஸ்தவர்கள் மனுஷருக்குமுன்பாகத் தம்மை அறிக் கைபண்ணும்படி கிறிஸ்து அதிக உருக்கத்தோடு ஏவிவிடுகிறார். நாம் எப்போதும் அவருடைய நாமத்தை உண்மையோடு அறிக்கை பண்ணுகிறவர்களாய் இருக்கும்படி கடவுள் கிருபைசெய்வாராக!

ஞா. பா. 304.

## புதன்கிழமை

### பாவிகளை இளைப்பாற்றுகிறவராகிய இயேசு

மத். 11, 28: பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்

இது ஏழைப்பாவிகளுக்கு முடிவற்ற ஆறுதலாயிருக்கும் இயேசுநாதருடைய ஓர் அருமையான வாக்கு. இதிலே அவர் தாம் அவர்கள் பாவங்களை எடுத்துக்கொண்டு மெய்ச் சந்தோஷத்தினால் அவர்களை நிரப்புவதாகச் சொல்லி அவர்களைக் கூப்பிட்டு அழைத்து இரட்சகருக்குரிய தமது அன்பைக் காட்டுகிறார்.

இவ்வுலக ஜீவியம் சம்பந்தப்பட்ட வரையில் கிறிஸ்தவர்கள் எவ்வளவோ வருந்தியுழைத்துப் பாரஞ்சுமக்கவேண்டியவர்களே. இப்பூலோகத்தில் அவர்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவோ தொல்லை, வியாதி, வறுமை, நோவு, சங்கடம், சஞ்சலம் அனுபவிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அவர்களை ஒடுக்குகிற ஆத்மீக கஷ்டமாகிய பாவத்தோடு இவைகளை ஒப்பிட்டுப்பார்த்தால் இவைகள் எம்மாத்திரம்? கிறிஸ்தவர்களும் பாவிகளே. அவர்களையும் தீமை பற்றிப் பிடித்திருக்கிறது. அவர்கள் எத்தனையோ தரம் பாவத்துக்குட்பட்டுச் செய்யவேண்டியவைகளைச் செய்யாதிருக்கிறார்கள். அவர்கள் இருதங்களிலும் பொல்லாத ஆசை இச்சைகள் எழும்புகின்றன. அவர்கள் எத்தனையோதரம் வெட்கப்படத்தக்க வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். இந்தப் பாவங்களெல்லாம் கடவுளின் நியாயப்பிரமாணத்துக்கு நேர் விரோதமானவைகள். கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களையறிந்து மனச்சாட்சி உறுத்தும்போது அவர்கள் கடவுளுடைய கோபாக்கினையை உணர்ந்து எவ்வளவாய் வருந்தியுழைக்கக் கூடும்! பாவம் எவ்வளவோ பயங்கரமான பாரமாகும்.

ஆனால் இதோ, கிறிஸ்தவர்கள் தங்கள் பாவத் திரளினாலே வருந்தியுழைக்கும்போது இரட்சகர் அவர்களை அன்பாய்ப் பார்த்து, வருந்தியுழைத்துப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களுக்காகச் சிலுவைமரத்தில் ஈடுசெலுத்தினவர் அவரே. இந்தச் சம்பாத்தியத்தின் பலனைப் பாவிகளுக்கு மன்னிப்பு அளிப்பதாகச் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு விசுவாசத்தில் அவரை ஏற்றுக்கொண்டால், அவர்கள் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கிடைக்கும்.

ஞா. பா. 119.

# வியாழக்கிழமை

### பாக்கியமான மரணம்

**லூக். 2, 29. 30:** ஆண்டவரே, இப்பொழுது உமது வார்த்தையின்படி உமது அடியேனைச் சமாதானமாய்ப் போகவிடுகிறீர்; நீர் ஆயத்தம்பண்ணின உமது இரட்சண்ணியத்தை என் கண்கள் கண்டது

நாம் பாக்கியமான மரணமடைவதெப்படி? அதைச் சிமியோனிடத்தில் கற்றுக்கொள்ளலாம். வயது சென்ற அவன் தன் பூலோக யாத்திரையின் பாக்கியமான முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் ஆவலோடு தமது ஜனமாகிய இஸ்ரவேலை பாவங்களிலிருந்து இரட்சிக்கப்போகும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். பரிசுத்தாவியினாலே "கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணத்தைக் காணமாட்டாய்" என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவன் தேவாலயத்துக்குப் போகும்போது இதோ, தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இயேசு பிள்ளை அங்கேயிருந்தது. அவர் பெற்றோர் அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கும்படி அங்கே கொண்டு வந்திருந்தார்கள். சிமியோன் அந்த அருமையான பிள்ளையைக் கண்டபோது தன் ஆண்டவரில் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்தான். திடவிசுவாசத்தோடு அவன் பிள்ளையைக் கைகளில் ஏந்திக்கொண்டு கடவுளைத் ஸ்தோத்திரித்து தன் கண்கள் இப்போது இரட்சகரைக் கண்டதினாலே பாக்கியத்தோடு உலகத்தை விட்டுவிட ஆயத்தமாய் இருப்பதாகச் சொன்னான்.

நம்மெல்லாரையும் முந்தியோ பிந்தியோ சாவு கிட்டுகிறது. வயோதிகனாகிய சிமியோனைப்போல நாமெல்லாரும் அவ்வளவு பாக்கியத்தோடு ஜீவனைவிட விரும்புகிறதில்லையா? சிமியோனுக்கிருந்த விசுவாசம் நமக்கிருந்தால் தாவிளை. இயேசுபிள்ளையைத் தன் கைகளில் ஏந்திக்கொள்ள ஏவிவிட்டது அவனுடைய திடவிசுவாசமே. அவராலே தனக்கு ஜீவனும் மோட்சமும் கிடைக்கும் என்று நம்பினான். அதினால் அவன் சந்தோஷத்தோடும் ஆறுதலான மனதோடும் தன் முடிவை எதிர்பார்த்தான். இவ்விதமாக நாமும் நமது ஆண்டவரையும் இரட்சகரையும் விசுவாசத்தில் கெட்டியாகப் பற்றிப் பிடிக்கவேண்டும், ஏனெனில் அவர்மேலே தான் நமது இரட்சிப்புச் சார்ந்திருக்கிறது. அப்போது மரணம் வரும்போது நாம் மனச்சமாதானத்தோடு நமது கண்களை மூடி நமது ஆண்டவரின் சந்தோஷத்துக்குள் பிரவேசிப்போம். அன்புள்ள கர்த்தர் நம்மெல்லாருக்கும் இப்படிப்பட்ட முடிவை தயவாய் அளிப்பாராக.

ஞா. பா. 504.

# வெள்ளிக்கிழமை

## நியாயப்பிரமாணமும் சுவிசேஷமும்

யோவா. 1, 17: மோசேயின் மூலமாய் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது; இயேசுகிறிஸ்துவின் மூலமாகமோ கிருபையும் சத்தியமும் வந்தன.

சத்தியவேதத்தில் இரவையும் பகலையும்போல் ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டு போதனைகள் இருக்கின்றன. அவைகள் நியாயப்பிரமாணமும் சுவிசேஷமும். நியாயப்பிரமாணமாவதென்ன? அது நாம் கடவுளுக்குப் பிரியமாயிருக்கும்படி செய்யவேண்டியவைகளையும் செய்யாமல் விலக்கவேண்டியவைகளையும்பற்றிச் சொல்லும் தெய்வீக போதனை. நாம் மனோவாக்குக் காயங்களில் பூரண பரிசுத்தமுள்ளவர்களாகும்படி நம்மைக் கேட்கிறது; ஒரேயொரு கற்பனையைமாத்திரம் மீறினால் அது நமக்குச் சாபத்தையும் நித்திய ஆக்கினையையும் வருவிப்பதாகப் பயமுறுத்துகிறது. நியாயப்பிரமாணம் நமது காதுகளில் பயங்கரமாய்த் தொனிக்கிறது, ஏனெனில் எந்த மனுஷன் அதைப் பூரணமாய்க் கைக்கொள்ளமுடியும்? நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

கடவுள் நமக்கு நியாயப்பிரமாணத்தைமாத்திரம் கொடுத்திருந்தால் ஒரு மனுஷனும் இரட்சிக்கப்படமுடியாது. ஆனால் கடவுளுக்கு ஸ்தோத்திரம்! அவர் தமது அருமையான சுவிசேஷத்தையும் நமக்குக் கொடுத்திருக்கிறார். அது நம்மிடத்தில் ஒன்றும் கேட்காமல் நம்முடைய இரட்சிப்புக்குத் தேவையானதெல்லாவற்றையும் நமக்களிக்கிறது. நாம் செய்யமுடியாததையெல்லாம் நமக்காகச் செய்து நாம் நியாயப்பிரமாணத்தை மீறினதினால் சம்பாதித்த தண்டனையை சிலுவையின் மரணத்தினால் நிவர்த்தியாக்கின நம்முடைய நேசகர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நமக்குக் காட்டுகிறது. கிறிஸ்து நமக்குச் சம்பாதித்ததை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் நாம் விசுவாசத்தோடு அவரண்டை வரவேண்டுமென்று சுவிசேஷம் நமக்குப் போதிக்கிறது. சுவிசேஷம் எவ்வளவோ அருமையான போதகம்! நியாயப்பிரமாணம் மோட்சத்தை நமக்குப் பூட்டுகிற சமயம் சுவிசேஷம் அதை நமக்குத் திறந்துவிடுகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, சுவிசேஷத்தை விசுவாசிக்கும் விசுவாசத்தினால் நமக்கு இரட்சிப்புக் கிடைக்கும்.

பாவத்தை அறியும் அறிவுக்கென்று நமக்கு நியாயப்பிரமாணத்தையும் இரட்சிப்பை அறியும் அறிவுக்கென்று நமக்குச் சுவிசேஷத்தையும் கொடுத்த கடவுளை நாம் ஸ்தோத்திரிப்போமாக.

ஞா. பா. 92.

## தமது குமாரனை அனுப்புவதில் கடவுள் காட்டின அன்பு

யோவா. 3, 16: கடவுள் தமது ஒரே பேறுன குமாரனில் விசுவாசிக்கிற எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை பெறும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

கடவுள் அன்பே என்று பரி. யோவான் எழுதுகிறுன். கடவுளின் முழுத் தன்மையும் அன்பு. அவருடைய அன்பு அளவற்றதும் சொல்லி முடியாததுமானது. மனுஷ அன்பைவிட அது எவ்வளவோ பெரியது. தம்மைப் பகைத்துத் தம்முடைய கற்பனைகளை மீறுகிற உலகத்துக்கு எதிராகக் கடவுள் நடக்கும் விதத்தினுல் இந்த அன்பின் பெருமை விளங்குகிறது. உலகம் தம்மைப் பகைக்கிறதுபோல் கடவுளும் உலகத்தைப் பகைத்துத் தமது கோபாக்கினையின் கலசத்தை ஊற்றி அதை நரகத்தின் ஆழத்தில் தள்ளிப்போடுவார் என்று நினைப்பது நியாயமே. ஆனுல் அப்படிச் செய்வதற்கிடம் இல்லை. கடவுளின் அன்பிற்கு எல்லையில்லை. பாவ உலகம் அவரை எவ்வளவோ துன்பப்படுத்தியிருந்தும் அவர் தமது அன்பினுல் அணைத்துக்கொள்ளுகிறுர். கடவுள் தமது நேசகுமாரனுகிய இயேசு கிறிஸ்துவை உலகத்துக்குப் பதிலாக வாதைக்கும் மரணத்துக்கும் ஒப்புக்கொடுக்கத்தக்கதாக இவ்வளவாய், இவ்வளவு அதிகமாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். இந்த அன்புக்கு மனுஷனுடைய அன்பு — அது கொடிய ஜென்ம விரோதிக்குக் காட்டப்படும் அன்பாயிருந்தாலும்— எம்மாத்திரம். இது மாத்திரமல்ல, கடவுளின் அன்பு இன்னும் அதிகமாய் எட்டுகிறது. அவர் பாவியின் மரணத்தை விரும்பாமல் இரட்சிக்கப்படுவதற்கு ஓர் எத்தனத்தைக் கொடுக்கிறுர். அழிவுக்குத் தப்பி நித்திய இரட்சிப்படையும்படி பாவிகளுக்கு ஒன்றுதான் வேண்டும். அது கடவுளின் ஒரே பேறுன குமாரனிடத்தில் வைக்கும் விசுவாசமே. விசுவாசிக்கிற எவனும், அவன் எவ்வளவு பெரிய பாவியாயிருந்தாலும், இரட்சிக்கப்படுவான். நமது இரட்சகர் அப்படிச் சொல்லுகிறுர். அதனுல் அது உண்மையென்பது நிச்சயம்.

இதைவிட அருமையான வாக்கியம் உண்டா? நாமும் விசுவாசிக்கிறவர்களைச் சேர்ந்தவர்களாயிருக்கும்படி கடவுள் கிருபை செய்வாராக.

ஞா. பா. 126

## உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகிய இயேசு கிறிஸ்து

யோவா. 11, 25. 26. இயேசு அவனிடம் உயிர்த்தெழுதலும் ஜீவனும் நானே, என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னில் விசுவாசம் வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரிக்கவே மாட்டான்.

*இறந்துபோன அவளுடைய சகோதரனாகிய லாசருவினிமித்தம் இயேசு மார்த்தாளுக்கு இவ்வார்த்தைகளைச் சொன்னார். இவைகள் ஜீவனுள்ள கடவுளின் குமாரன் மாத்திரம் பேசக்கூடிய வல்லமையுள்ள வார்த்தைகள். இயேசு உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார். அவர் எல்லா ஜீவனின் ஊற்றாயிருக்கிறதினாலே உயிர்த்தெழுதலுமாயிருக்கிறார். அவர் சாவின் எஜமானானைகயால் சாவு தன் கொள்ளைப் பொருளைத் திரும்பக் கொடுக்கவேண்டியது. தமது ஜீவிய காலத்தில் மரித்துப்போன பலரை அவர் உயிரோடெழுப்பினதால் இதை நிரூபித்துக் காட்டினார். மரித்துப்போன எல்லாரும் அவர் சத்தத்தைக் கேட்டுக் கல்லறையிலிருந்து புறப்படும் கடைசி நியாயத்தீர்ப்பு நாளிலோ மரணத்தின் பேரிலுள்ள தமது வல்லமையை வெகு சிறப்பாகக் காட்டுவார். தங்கள் அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவினிடம் விசுவாசம் வைத்துப் பூலோகத்தை விட்டுவிட்டவர்களுடைய நிலைமை அப்போது எவ்வளவோ பாக்கியமுள்ளதாயிருக்கும். அவர் உயர்த்தப்பட்ட பரம நிலைமையில் ஜீவிப்பார்கள்; இயேசு கிறிஸ்து அவர்களில் ஜீவிக்கிறதினால் அவர்கள் அவருடைய ஜீவனின் பங்காளிகளாவார்கள். எனினும் செத்துப்போகிறார்களே! வாஸ்தவந்தான் கிறிஸ்தவர்களும் பாவத்தின் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது, ஆனால் அது மரணமாயிராமல் தற்காலிகமான நித்திரையே. தற்காலமான மரணம் கடவுள் அவர்களுக்குள் உண்டாயிருக்கும் ஆத்மீக ஜீவனை ஒன்றும் செய்யமுடியாது. அந்த ஜீவன் மரணத்தைக் கடந்து நித்திய ஜீவனுக்குச் செல்லுகிறது. அது வரைக்கும் அவர்கள் சரீரங்கள் நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று இளைப்பாறுகின்றன. அந்நாளில் நமது இரட்சகர் இவைகளை எழுப்பிச் சாகாத ஆத்துமாவோடு இவைகளை இணைப்பார். அப்போது அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அழகான மோட்சத்தில் சரீரப்பிரகாரமும் ஆத்துமப் பிரகாரமும் நித்திய காலமாய் அவரோடு ஜீவிப்பார்கள்.*

*நமது இரட்சகரின் இந்த இன்பமான வார்த்தை நமக்கும் ஆறுதல் அளிக்காதா?*

ஞா. பா. 244

# திங்கட்கிழமை

## இரட்சிப்பின் ஒரே வழியாகிய கிறிஸ்து

யோவா. 14, 6: வழியும் சத்தியமும் ஜீவனும் நானே; என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடம் வரான்.

இவ்வார்த்தைகளாலே நமது இரட்சகர் தம்மாலேமாத்திரம் நாம் இரட்சிக்கப்படமுடியும் என்ற நிச்சயமான சத்தியத்தைத் தெரிவிக்கிறார். நானே வழி யென்னும் வார்த்தைகளினால் அவர் ஆரம்பிக்கிறார் அதினால் அவர் "நான் மோட்சத்திற்குப் போகும் ஒரே வழி. உண்மையான கடவுளின் குமாரனாகிய நான் வரப்போகிற என்னுடைய பாடுகளினாலே முழு உலகத்தின் பாவத்துக்கும் ஈடு செலுத்தி மரித்தோரிடத்திலிருந்து நான் உயிர்த்தெழுவதினால் எல்லா மனுஷருக்கும் நீதியைச் சம்பாதிப்பேன், விசுவாசத்தினால் என்னுடைய இந்தச் சம்பாத்தியத்தைத் தனக்குச் சொந்தமாக்கிகிறவன் மோட்சத்திற்குப் போக நான் உண்டாக்கின வழியில் செல்லுகிறான்" என்று சொல்லுகிறார். இங்கே நாம் இரட்சிப்படையும் வழியை கிறிஸ்து எவ்வளவோ தெளிவாகக் காட்டுகிறார். அவர் இல்லாமல் மோட்சம் பூட்டப்பட்டதாயிருக்கும். அடுத்தபடி இயேசு நான் சத்தியம் என்கிறார். அதினால் அவர் "நான் போதித்ததெல்லாம் தவறாத சத்தியமே. நான் போதித்துவந்ததென்ன? நான் பரலோகராஜ்யத்தைப்பற்றிய சுவிசேஷத்தை அறிவித்தேன்; என் பரமபிதா பாவிகளிடம் எவ்வித அன்புள்ள சிந்தையுடையவராயிருக்கிறார் என்று காட்டி மனுஷருக்கு மோட்சத்திற்குப்போகும் ஒரே ஒரு வழியைக் காட்டியிருக்கிறேன். இது நான் அறிவித்த போதனையே" என்கிறார். மெய்யான கடவுளாகிய அவர் தாமே சத்தியமாயிருக்கிறதினால் அவர் வார்த்தையை யார் சந்தேகிக்கக்கூடும்? கடைசியில் கிறிஸ்து நானே ஜீவன் என்கிறார். அதினால் அவர் "என்னாலேமாத்திரம் மனுஷன் ஜீவிக்கக்கூடும், என்னாலேயல்லாமல் அவன் செத்தவனே. நான் அவனில் கடவுளிடமிருந்துவரும் ஆத்மீக ஜீவனை உண்டாக்கிக் கடைசியில் அவனை நித்திய ஜீவனுக்குள் வழிநடத்துகிறேன்," என்கிறார்.

என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடம் வரான் என்று கிறிஸ்து சொல்லும் வார்த்தை உண்மையல்லவா? ஆ, எல்லா மனுஷரும் தங்களை மோட்சத்துக்கு வழிநடத்தும் ஒரே வழியாகிய கிறிஸ்வைத் தங்கள் விசுவாசத்தில் பற்றிப்பிடித்துக்கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும்!

ஞா. பா. 191.

## செவ்வாய்க்கிழமை

### *நீதிமானுகத் தீர்க்கும் விசுவாசம்*

ரோமர். 3, 28: மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமல் விசுவாசத்தினுலேயே நீதிமானுகத்தீர்க்கப்படுகிருன் என்று எண்ணுகிறோமே.

மெய்யாகவே இது ஒரு சிறந்த பொன் வாக்கியம். இதிலே மனுஷன் கடவுளுக்கு முன்பாக எப்படி நீதிமானுவான் என்ற மிகப் பெரிதான கேள்விக்குப் பதிலளிக்கப்படுகிறது. அப். பவுல் முதலில் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிருபைகளினுல் இரட்சிக்கப் படமுடியாதென்று வெகு விவரமாகச் சொல்லுகிருர். தாங்கள் செய்யும் கிரியைகளினுலே மோட்சம் அடையலாம் என்று மனுஷர் எண்ணிக்கொள்ளுகிறவைகளே நியாயப்பிரமாணத்தின் கிரியைகளாம். அப்படி எண்ணுவது மிகப் பயங்கரமான தவறு. மனுஷன் எத்தனை நற்கிரியைகளைச் செய்தாலும் அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளான பாவியாகவேயிருக்கிருன். ஏனெனில் கடவுள் தமது நியாயப்பிரமாணத்தின் பூரண கீழ்ப்படிதலை விரும்புகிருர். இப்படிப்பட்ட கீழ்ப்படிதலை யார் காட்டக்கூடும்? இல்லை, நியாயப்பிரமாணக் கிரியைகளினுலே மாம்சமான எவனும் நீதிமானுத்தீர்க்கப்படுவதில்லையே என்று வேதம் சொல்லுகிறது. கடவுள் தமது சர்வவல்லமையினுல் உண்டாக்கும் விசுவாசம் மாத்திரம் நம்மைக் கடவுளுக்கு முன்பாக நீதிமான்களாக்கக்கூடும். இந்த விசுவாசத்தின் மேன்மையே மேன்மை! அது வெறும் அறிவாயிராமல் இயேசு கிறிஸ்துவின்மேலும் அவர் சம்பாத்தியத்தின்மேலும் நாம் வைக்கும் திடநம்பிக்கையாம். உலகத்தின் ஒப்புரவாக்குதலுக்கென்று கிறிஸ்து செய்ததெல்லாவற்றையும் விசுவாசம் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுகிறது. “கிறிஸ்து முழுப்பாவ உலகத்தின்பேரில் அன்புகூர்ந்து மரணமடைந்தார், அதினுல் அவர் என்னிடத்திலும் அன்புகூர்ந்தார். கிறிஸ்து முழு உலகத்தையும் கடவுளோடு ஒப்புரவாக்கினுர், அதினுல் அவர் என்னையும் கடவுளோடு ஒப்புரவாக்கினுர். கிறிஸ்து எல்லா மனுஷருக்காகவும் மோட்சத்தைச் சம்பாதித்தார். அதினுல் அவர் எனக்காகவும் அதைச்சம்பாதித்தார். அவராலே நான் நிச்சயமாகவே இரட்சிக்கப்படக்கூடும்” என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் சொலலக்கூடும். இதுதான் விசுவாசம்.

லுத்தரன் சபைக்கும் மற்றெல்லாக் கள்ளப்போதகச் சபைகளுக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டும் இந்தப் பிரதான போதனையை நாம் நன்கு மதிப்போமாக!

ஞா. பா. 309.

# புதன்கிழமை

## ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கிறவன் யார்?

ரோ. 8, 3: ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்து இயேசுவே மரித்தவர்; இது மாத்திரமோ? அவரே எழுப்பப்பட்டுமிருக்கிறவர்; அவரே கடவுளின் வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

அப்போஸ்தலனாகிய பவுலின் இந்தச் சந்தோஷ ஆரவாரம் அதிக உபத்திரவத்தில் இருந்த அநேகருக்கு ஆறுதலை அளித்திருக்கிறது. விசுவாசிகளுடைய இரட்சிப்பு கடவுளுடைய உண்மையுள்ள கரத்தில் இருக்கிறது. ஆனால் இந்த இரட்சிப்பை விசுவாசிகளிடத்திலிருந்து பறித்து, அவர்களை ஆக்கினைக்குள்ளளாகத் தீர்க்க விரும்பும் கொடிய எதிராளிகளிருக்கிறார்கள். "நான் தேவ பிள்ளையா". என்னும் சந்தேகத்தை நமது இருதயத்தில் அடிக்கடி உண்டாக்க விரும்பும் பிசாசு இருக்கிறான். நீ ஒரு பாவி, நீ இரட்சிப்பை எதிர்பார்க்க முயடியாது என்று அவன் நமது காதிலே அடிக்கடி ஊதுகிறான். நமது அநேக பாவங்களின் நிமித்தம் நம்மைக் குற்றஞ்சாட்டி நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் நியாயப்பிரமாணம் இருக்கிறது. நாம் மனச்சமாதானம் அடையாதபடி நமது மனச்சாட்சி நம்மைக் கஷ்டப்படுத்திப் பயப்படுத்துகிறது. கடவுள் நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி இம்மூன்று எதிராளிகள் பிரயத்தனப்படுகிறார்கள். இப்படிச் செய்ய அவர்களால் ஆகுமா? ஒருகாலமும் ஆகாது! அவர்களுடைய குற்றச்சாட்டு எல்லாம் கடவுளின் உண்மையுள்ள வாக்குத்தத்தத்தினால் வீணாய்ப் போகிறது. வல்ல கடவுளாகிய கிறிஸ்து நம்மைக் காப்பாற்றுகிறார், ஏனெனில் அவர் நமக்காக மரித்து நம்மைப் பாவத்திலிருந்தும் பிசாசின் வல்லமையிலிருந்தும் மீட்டிரட்சித்தார்; பிதாவாகிய கடவுள் அவரை மரணத்திலிருந்து எழுப்பினதினால் இந்த இரட்சிப்பின் வேலை பூரணப்பட்டிருக்கிறது. இப்போது கிறிஸ்து வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராய்க் கடவுளின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். மெய் விசுவாசத்தினால் தம்மை அறிக்கையிடுகிறவர்களாகிய நாம் மருள விழாதபடி அவர் விசுவாசத்தில் காப்பாற்றி நமக்கு விரோதமாகச் சாட்டப்படும் எல்லாக் குற்றச் சாட்டுகளுக்கும் எதிராகத் தமது பரம பிதாவுக்கு முன்பாக நமக்காகப் பரிந்து பேசுகிறார். அதனால் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்து நம்மைப் பாவத்திலிருந்து சுத்திகரித்த சம்பாத்தியத்தைப் பார்க்கும்போது நியாயப்பிரமாணமும், பிசாசும் நமது மனச்சாட்சியும் மௌனமாயிருக்கவேண்டும்.

இந்தச் சிறந்த ஆறுதலை முழுமனதோடும் நம்புவோமாக! அப்படிச் செய்தால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

ஞா. பா. 494

# வியாழக்கிழமை

## விசுவாசத்தில் நிலைத்திருத்தல்

ரோமர் 8, 38. 36 : மரணமோ ஜீவனோ தேவதூதரோ துரைத்தனங்களோ நிகழ்காரியங்களோ வருங்காரியங்களோ வல்லமைகளோ உயர்வோ தாழ்வோ வேறெந்த சிருஷ்டியானாலுஞ் சரி, நமது ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள கடவுளின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாதிருக்குமென்று நிச்சயித்திருக்கிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுலின் இந்தச் சிறந்த வார்த்தைகளைவிடப் பூலோகத்தின் எந்தப் புஸ்தகத்திலும் இவ்வளவு மேன்மையான வார்த்தைகளைக் காண முடியும்? விசுவாசத்தில் நிலைத்திருப்பதைப் பற்றி அவர் எவ்வளவோ தெய்வீக நிச்சயத்தோடு புகழ்ந்து பேசுகிறார்! தங்கள் இரட்சிப்பைப்பற்றி உண்மையாய் அக்கறைப்படுகிறவர்களை எதுவும் விசுவாசத்திலிருந்து தள்ளிவிடமுடியாது. அதனால் நரகமும் மரணமும் எந்த உபத்திரவமும், ஆம் இரத்த சாட்சியின் மரணமும்கூட அவர்களைக் கடவுளின் அன்பைவிட்டு பிரிக்கமுடியாது. இந்த ஜீவனின் எல்லாச் சோதனைகளும், அப்படிச் செய்யப் பார்த்தாலும் பிரதான தேவதூதனும் வேறெந்த வல்லமையும் அப்படிச் செய்ய முடியாது. ஆத்துமாவுக்கு எத்தனையோ ஆபத்துக்களை உண்டாக்கும் நிகழ்காலமும் வருங்காலமும், நரகத்தில் வசிக்கும் ஆவிகளும் எப்பேர்ப்பட்ட சிருஷ்டியும்கூட நம்மை ஒன்றுஞ் செய்ய முடியாது. இது விசுவாசத்தின் நிச்சயமான நம்பிக்கை. எந்த கிறிஸ்தவனும் இப்படிப்பட்ட நிச்சயமுடையவனாயிருக்கக்கூடும். தன்னுடைய இரட்சிப்பைப்பற்றி அவனுக்குச் சந்தேகங்கள் உண்டாகும்போது இச்சந்தேகங்கள் அவனை ஏமாற்ற விரும்புகிற பிசாசினின்று வருகின்றன என்று அவன் அறிந்துகொள்ளக் கடவான், ஏனெனில் "விசுவாசமானது எதிர் நோக்கி ஆசிக்கிறவைகளில் நமக்கு உறுதி, காணப்படாதவைகளில் நமக்கு நிச்சயம்", (எபி. 11, 1).

கடவுள் நம்மை எல்லாச் சந்தேகங்களிலிருந்தும் காப்பாற்றி நமக்கு நிச்சயத்தையும் மரணபரியந்தம் நிலைநிற்கும் விசுவாசத்தையும் அளிப்பாராக!

ஞா. பா. 293

# வெள்ளிக்கிழமை

## ஆண்டவருக்கென்று பிழைப்பதும் மரிப்பதும்

**ரோமர் 14, 8: நாம் பிழைத்தாலும் ஆண்டவருக்கென்று பிழைக்கிறோம், மரித்தாலும் ஆண்டவருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் ஆண்டவருடையவர்களே.**

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டவருடையவர்கள் என்று மேற்கண்ட வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு நம்மைத் தம்முடைய சம்பாத்தியத்தினால் மீட்டிரட்சித்துத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டார். அவர் நம்முடைய ஆண்டவர். ஆகையால் நம்முடைய முழு ஜீவியமும் அவருக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கவேண்டும். தொட்டில் முதல் சுடுகாடுமட்டும் நாம் பரிசுத்தத்திலும் நீதியிலும் அவருக்கே ஊழியஞ் செய்யக் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருந்தால் அவருடைய சித்தத்தைச் சந்தோஷத்தோடு செய்வோம்; ஏனென்றால் நாம் அதனால் அவரைப் பிரியப்படுத்துகிறோம் என்று அறிந்துகொள்ளுகிறோம். நாம் அவருடைய வார்த்தையை நம்முடைய பொக்கிஷமாக நினைப்போம். அது நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் நூலாய் இருக்கும். நாம் ஞானப்பிரசங்கத்தைச் சந்தோஷத்தோடு கேட்டு அதனாலே நாம் அவரை எப்படிச் சேவிக்கலாம் என்று கற்றுக்கொள்வோம். பாவஞ் செய்யாதபடி நாம் நம்மைக் காத்துக்கொள்வோம். ஏனென்றால் நாம் அதனால் கடவுளை நிந்தித்து அவரைக் கோபப்படுத்துகிறோம் என்று அறிந்துகொள்கிறோம். நாம் நம்முடைய விண்ணப்பங்களினாலும் மன்றாட்டுகளினாலும் துதிகளினாலும் ஜெபத்தில் அவரோடு இணைக்கப்படுகிறோம். நாம் பெற்ற அழைப்பிலே, கடவுளுடைய மகிமைக்கென்றும் பிறனுடைய நன்மைக்கென்றும் நமது வேலையை உண்மையாக முடிப்போம். நமக்குப் பாக்கியங்கள் கிடைத்தால், நமக்கிருக்கிறவைகளெல்லாம் கடவுளிடமிருந்து வந்தவைகளாக மனத்தாழ்மையோடு அறிக்கையிடுவோம். இப்படி நாம் கடவுளுக்கென்று நம்முடைய ஜீவனைப் பிரதிஷ்டை செய்கிறோம்.

நாம் மரணத்திலும் கடவுளுடையவர்கள். மரண காலம் வரும்போது, அவர் நம்மை மரண வேளையிலும் கைவிடமாட்டார் என்று நாம் திட்டமாக நம்பி அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறோம். நாம் சந்தோஷத்தோடு நம்முடைய ஜீவனையும் மரணத்தையும் கர்த்தரிடம் ஒப்புவிப்போமாக.

ஞா. பா. 503

## கிறிஸ்தவ சுயாதீனம்

கலா. 5, 1: சுயாதீனத்துக்கென்றே கிறிஸ்து நம்மைச் சுயாதீனராக்கினார்: ஆதலால் நீங்கள் நிலைத்திருங்கள்.

கிறிஸ்தவ சுயாதீனம் நாம் கடவுளிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஓர் ஒப்பற்ற உரிமை. அதற்காக நாம் அவருக்கு போதுமான நன்றி செலுத்த முடியாது. முதலாவது தெய்வீக நியாயப்பிரமாணம் கேட்கிறவைகளிலிருந்து அது ஒரு சுயாதீனமாம். கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நீங்கலாக்கி இருக்கிறதினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் பாவமொன்றும் நம்மில் இல்லை. மேலும், அவர் நம்மை நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து சுயாதீனராக்கியிருக்கிறார். அது இனிமேல் நம்மிடத்தில் ஒன்றுங் கேட்கவும் முடியாது, குற்றஞ் சாட்டவும் முடியாது. நாம் இப்போது பலவந்தமின்றிக் கடவுளுடைய கட்டளைகளை மனமுவந்து நிறைவேற்றுகிறோம். கிறிஸ்து நம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் சுயாதீனராக்கியிருக்கிறார். அது கிறிஸ்தவர்களாகிய நம்மை இனிமேல் ஆண்டு நடத்த முடியாது, நாமே அதின்மேல் அதிகாரிகளாய் இருக்கிறோம். நாம் நம்முடைய ஜீவனைக் கடவுளின் சித்தப்படி நடத்துவதற்குக் கடவுளின் ஆவியானவர் நம்மை ஏவிவிடுகிறார். இந்தச் சுயாதீனத்தினால் நாம் மனுஷருடைய கற்பனைகள் எல்லாவற்றிலுமிருந்தும் விடுதலையாகிறோம். கிறிஸ்து நம்மைத் தெய்வீக நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கியிருக்க, மனுஷர் விதிக்கும் கற்பனைகளுக்கு நாம் ஏன் விடுதலை ஆகமாட்டோம்? நாம் எல்லாவற்றையுஞ் செய்யக்கூடும், எல்லாவற்றையும் விட்டுவிடக்கூடும் — ஒரே நிபந்தனையோடு: நாம் செய்வது கடவுளிடம்கொள்ளும் அன்புக்கும் பிறனிடம்கொள்ளும் அன்புக்கும் விரோதமாயிருக்கக்கூடாது. இலௌகீக விஷயங்களில் இருக்கிற ஒழுங்குகளுக்கெல்லாம் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படுகிறோம்; ஆத்மீக விஷயங்களிலோ அதாவது விசுவாசத்துக்கும் மனச்சாட்சிக்கும் அடுத்த விஷயங்களிலோ ஒருவனும் நமக்குக் கட்டளையிட முடியாது.

கிறிஸ்தவ சுயாதீனம் எவ்வளவோ அருமையானது! அது இல்லாமல் ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கமுடியாது. அதனால் அப்போஸ்தலன் இச்சுயாதீனம் நம்மிடமிருந்து பறித்துக்கொள்ளாதபடி நம்மை எச்சரிக்கிறார். நாம் திரும்பவும் நியாயப்பிரமாணத்தின் நுகத்தடிக்குட்பட்டு நம்முடைய இரட்சிப்பை அதில் தேடினால் நம்முடைய சுயாதீனத்தை இழந்துபோவோம்.

ஞா. பா. 346.

# ஞாயிற்றுக்கிழமை

## தெரிந்தெடுக்கப்படுவதின் ஆறுதல்

**எபே. 1, 3. 5:** நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்திரத்துக்குரியவர்......... அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே இவருக்குள் நம்மைத் தெரிந்தெடுத்தார்; தமது தயவுள்ள சித்தத்திற்கிசைய நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி அன்பிலே முன் குறித்தார்.

இவ்விடத்தில் சொல்லப்படும் தெரிந்தெடுத்தல் கிறிஸ்தவர்களாகிய நமக்கு அதிக ஆறுதலான போதகம்; ஏனெனில் அதனால் நாம் நம்முடைய இரட்சிப்பைப்பற்றிய நிச்சயத்தை அடைகிறோம். ஏனென்றால் நித்தியகாலமாக உலகத்தோற்றத்திற்குமுனனே கடவுள் நம்மைக் கெட்டுப்போனவர்களின் திரளிலிருந்து தெரிந்தெடுத்துப் புத்திரசுவிகாரத்திற்கு நம்மை முன் குறித்தார். அவர் நம்முடைய இரட்சிப்பைப்பற்றி யோசித்து அதை நமக்கு அளிக்கத் தீர்மானித்தார். கடவுள் தீர்மானித்தது தவறாமல் நடக்கும். அவர் நித்திய காலத்தில் நம் விஷயமாய்ச் செய்த தீர்மானத்தை எவ்வளவு சிறப்பாய் நிறைவேற்றினார்! அவர் நம்மைக் காலக்கிரமத்தில் தம்முடைய சுவிசேஷத்தினால் வரவழைத்து இயேசுவிடத்தில் வைக்கும் விசுவாசத்தை நம்மில் உண்டாக்கி நம்மை தம்முடைய நேசபிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு நம்மேல் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை வருஷித்தார். தம்முடைய தீர்மானத்தின்படி நம்மை இவ்விசுவாசத்தில் காப்பாற்றிக் கடைசியில் தம்முடைய மோட்சத்தில் சேர்க்க விரும்புகிறார். அதை அறிந்து நம்முடைய இருதயம் சந்தோஷத்தினால் பூரிப்படையாதா? கடவுள் ஸ்தோத்திரத்துக்குரியவர் என்று அப்போஸ்தலன் சொல்வதைக் குறித்து நாம் என் ஆச்சரியப்படவேண்டும்? மேலும், விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக நாம் நம்மைத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோடு எண்ணிக்கொள்ளலாம்; ஏனெனில் நாம் கடவுளின் கிருபையினால் கொண்ட விசுவாசம் உலகத்தோற்றத்திற்கு முன்னே கடவுளால் தீர்மானிக்கப்பட்ட விசுவாசமே. அதனால் நாம் உண்மையில் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் தொகுதியில் சேர்ந்தவர்கள். இது எவ்வளவு பெரிய ஆறுதல்! நம்முடைய இரட்சிப்பு கடவுளின் கரத்தில் இருக்கிறது. நாம் பாக்கியமான முடிவை அடையும்படி அவரே செய்வார். கடவுளுடைய பெரிய அன்புக்கும் உண்மைக்கும் நித்தியகாலமாய் ஸ்தோத்திரமுண்டாவதாக.

ஞா. பா. 293

## கடவுளின் கிருபை வரமாகிய நம்முடைய இரட்சிப்பு

எபே. 2, 8: கிருபையினுலேயே விசுவாசத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது கடவுளின் ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடி இது கிரியைகளினுல் உண்டானதல்ல.

ஒரு கிறிஸ்தவன் வெகு பாக்கியமுள்ள மனிதன். அவன் தன்னுடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அந்த விசுவாசத்தினுல் கடவுளின் அன்பைப்பற்றி நிச்சயம் அடைந்து ஒரு தேவபிள்ளையாயிருக்கிறுன். அவன் நரக தண்டனைக்குப் பாத்திரமாயிருக்கிற பாவங்களுக்காக மன்னிப்பைப் பெற்று நித்யஜீவனின் இனிய நம்பிக்கையுடையவனுயிருக்கிறுன். வாஸ்தவத்தில் இது பாக்கியமான ஒரு நிலைமை! இப்படிப்பட்ட நிலைமைக்கு அவன் எப்படி வந்தான்? அதற்கு அவனே காரணமா? இல்லை — நமது வாக்கியத்தின்படி மனுஷனுடைய எந்தச்செய்கையும் சம்பாத்தியமும் வீணுகும். கிரியை நடப்பிக்கிறவர் கடவுளே; அவர் அதைச் சுத்த தயவினுல் செய்துவருகிறுர் — அதில் நாம் கொஞ்சங்கூடப் பங்கு பெறுகிறதில்லை. நம்முடைய இரட்சிப்பு கடவுளின் ஈவு. நம்மை இரட்சிக்கும் விசுவாசம் நம்மிடத்திலே உண்டாகும்படி நாம் ஒரு சின்னஞ்சிறிய கிரியையாவது செய்யக்கூடுமானுல் நாம் அந்தக் கிரியையின் நிமித்தம் மேன்மைபாராட்டலாம்; ஆனுல் நாம் அப்படி மேன்மைபாராட்ட இடமில்லை; நம்முடைய வாக்கியத்தின்படி ஒருவரும் பெருமைபாராட்டாதபடி இது கிருபையினுல் உண்டானது. நாம் எதையாவது செய்யக்கூடியவர்களாயிருந்தால், கிருபைக்கு அவ்வளவு மேன்மையிராது, அது வீணுய்த்தான் இருக்கும், ஏனெனில் வேதம் சொல்லுகிறபடி: அது உண்டாகாதிருந்தால் கிருபையானது இனி கிருபையல்லவே, அப்பொழுது கடவுளுக்குச் சேர வேண்டிய புகழ் மனுஷருக்குச் சேரும். கடவுளின் கிருபைமாத்திரம் மனுஷனில் விசுவாசத்தை உண்டாக்கி, அதைக் காப்பாற்றி அவனை இரட்சிக்கும். அதனுல் நாம் பாவக்கறையுள்ள நமது நற்கிரியைகளில் சார்ந்திருக்காதபடி அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கடவுள் ஒவ்வொரு பாவிக்கும் இலவசமாய்க் கொடுக்க விரும்புகிற கிருபையின்மேல் மாத்திரம் சார்ந்துகொள்வோமாக. அப்பொழுது அதில் நம்முடைய ஒன்றுன ஆறுதலைக் கண்டுபிடிப்போம்; ஏனென்றுல் அதுமாத்திரம் உறுதியானது.

ஞா. பா. 299.

# செவ்வாய்க்கிழமை

## *பரிசுத்தவான்களின் ஐக்கியமாகிய திருச்சபை*

எபே. 2, 19. 20: நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமல்ல, பரிசுத்தவான்களோடுகூட ஒரே ஜனசமுக சிலாக்கியமுடையவர்கள், கடவுளின் வீட்டார், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்கள்; கிறிஸ்து இயேசு தாமே கோடிக்கல்.

காணப்படும் சபையும் காணப்படாத சபையும் உண்டு. கடவுளுடைய திருவசனத்தின் முழுப் போதகத்தையும் கலப்பில்லாச் சுத்தாங்கமாய்க் கற்றுக்கொண்டு போதித்து அறிக்கையிட்டுச் சாக்கிரமெந்துக்களைக் கிறிஸ்துவினுடைய ஏற்பாட்டின்படி சரியாய் நடத்துகிற சபையே காணப்படுகிற மெய்யான சபையாம். வசனத்தினால் இயேசுவின் சீஷர்களானவர்களின் கூட்டம் அதாவது இயேசுவை விசுவாசிக்கும் மெய் விசுவாசிகளின் திரள் காணப்படாத திருச்சபையாம். இந்தக் காணப்படாத சபையின் அங்கத்தினனாய் இருப்பது ஒரு சிறப்பான சிலாக்கியம். இதை அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய வாக்கியத்தில் அழகாய் வர்ணிக்கிறான். அவன் திருச்சபையை ஒரு குடும்பத்துக்கு ஒப்பிட்டுப் பேசுகிறான். அவன் தன் கிறிஸ்தவர்களைப் பார்த்து: நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமல்ல என்று சொல்லுகிறான். அவர்கள் கடவுளுடைய குமாரனின் ஐக்கியத்திற்கு வரவழைக்கப்படாததற்குமுன் அவர்கள் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். இப்பொழுது கடவுள் அவர்களைத் தம்முடைய வீட்டிலே ஏற்றுக்கொண்டு அவர்களைத் தம்முடைய குடும்பத்தாராக்கி அவர்களுக்குப் பிள்ளைகளின் உரிமைகளையும் சொத்துக்களையும் அளிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தம்முடைய திருச்சபைக்கு அளிக்கும் சகல வரங்களும் அவர்களுடையது: அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு நித்திய ஜீவனின் சுதந்தரராயிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் எதினால் பெறுகிறார்கள்? அவர்கள் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அறிவித்த இயேசுவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டபடியால் தான்.

காணப்படாத சபையின் அங்கத்தினர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்! நம்மை அந்தச் சபையில் சேர்த்த கடவுளுக்கு ஸ்தோத்திரம்.

ஞா. பா. 465

## கிறிஸ்தவர்களுடைய பாக்கியமான நம்பிக்கை

**1 பேது. 1, 3. 4:** நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்திரத்துக்குரியவர். அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினலே ஜீவனுள்ள நன்னம்பிக்கையுண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜனிப்பித்தார்.

இங்கே அப்போஸ்தலன் கடவுளை ஏன் ஸ்தோத்திரிக்கிருன்? கிறிஸ்தவர்களாகிய நமக்கிருக்கும் நம்பிக்கையின் நிமித்தமே. இந்த நம்பிக்கைக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துவது தகுதிதான். ஏனென்ருல் இந்த ஜீவனுக்குப் பின்வரும் அழிவற்ற சுதந்தரம் அதன்மேல் சார்ந்திருக்கிறது. மறுஜெனனத்தினுல் நமக்கு இரட்சிப்பின் நன்மைகளெல்லாம் கிடைத்திருக்கின்றன. நமக்கு நித்திய ஜீவன் இப்பொழுது உண்டு. அப்படியிருந்தும், வேதத்தில் அநேக இடங்களில் சொல்லப்படுகிறதுபோல் அதை நாம் எதிர்பார்க்கலாம். இந்த நம்பிக்கை இப்பூலோகத்தின் நம்பிக்கைகளைப்போல வீணனதல்ல. அது உறுதியானது, நம்முடைய வாக்கியம் சொல்லுகிறதுபோல் அது ஜீவனுள்ளது அதாவது அது வாஸ்தவத்தில் நிறைவேறும். அது உறுதியாய் நிரூபிக்கப்பட்ட கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கிறது. கிறிஸ்து நமக்காக மரணம் அடைந்த பிறகு மரித்தோரிலிருந்து வாஸ்தவத்தில் எழுந்து தம்முடைய மகிமையில் பிரவேசித்தார். அதே நிச்சயத்தோடு தம்முடைய அனுசாரிகளையும் மோட்சத்தில் மகிமைப்படுத்துவார் என்று நாம் நம்புகிறோம். ஏனென்ருல் "சிரசை அவயவம் சேருவதவசியம்." இதனிமித்தம் கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை அதிக பாக்கியமான நம்பிக்கை. நாம் பரம சுதந்தரத்தை நினைக்கும்போது, நம்முடைய இருதயம் சந்தோஷத்தினுல் பூரிக்கும். இப்பேர்ப்பட்ட ஜீவனுள்ள நன்னம்பிக்கை உண்டாகும்படி நம்மை மறுபடியும் ஜனிப்பித்த கடவுளுக்கு ஸ்தோத்திரம்.

ஞா. பா. 260.

# வியாழக்கிழமை

## பரிசுத்தமாகுதல்

**1 பேது 1, 15. 16:** உங்களை அழைத்த பரிசுத்தருக்கொத்தபடி நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராகுங்கள்: நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

எபி. 12, 14–ல் "பரிசுத்தமாக்கப்படவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் ஆண்டவரை தரிசிப்பதில்லையே" என்று எழுதியிருக்கிறது. இது வெகு விசேஷமான வார்த்தை. ஏனெனில் நம்முடைய இரட்சிப்பு பரிசுத்தமாகுதலின்பேரில் சார்ந்திருக்கிறது. பரிசுத்தமாகுதல் எதில் அடங்கியிருக்கிறது? மனுஷன் விசுவாசத்தால் நீதிமானாகி, கடவுளின் பிள்ளையாகத் தன்னுடைய முழு ஜீவனையும் கடவுளின் சித்தத்திற்கும் கட்டளைக்கும் இணங்கச் செய்வான். கிறிஸ்தவன் புறம்பான பாவங்களிலிருந்து விலகுயிருப்பதுமாத்திரம் பரிசுத்தமாகாது — ஒரு புறமதஸ்தனும் அப்படிச் செய்யக்கூடும் — அவன் முற்றிலும் புதிய மனுஷனாவது பரிசுத்தமாகுதலாம். அவன் தன்னுடைய முழு ஜீவனையும் இயேசுவுக்குப் பிரதிஷ்டை செய்ய விரும்புகிறான். அவன் பாவத்திற்கு விரோதியாகி அது இனி தன்னை ஆண்டுநடத்துவதற்கு இடங்கொடுக்கமாட்டான். அவன் பெலவீனத்தினால் இடறிவிழுந்தால் அவன் விழுந்துகிடக்கிறதில்லை, அவன் மெய்ம் மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக்கேட்கிறான். அவன் மற்ற மனுஷரோடு பழகிவருவதில் அநியாயஞ் செய்யமாட்டான். அவன் நாளுக்குநாள் தேர்ச்சியடையப் பிரயாசப்பட்டு, தன்னுடைய பரிசுத்தமாகுதல் பூரணமற்றதாயிருந்தபொழுதிலும் கடவுளிடமிருந்து வரும் ஜீவனில் பூரணமடையப் பார்க்கிறான்.

இப்படிப் பரிசுத்தமாகுதலை நாடித்தேடுவது கடவுளின் சித்தம். ஏனென்றால் நம்முடைய வாக்கியம் சொல்லுகிறபடி கடவுள் பரிசுத்தர். அதனால் நம்முடைய நடக்கை பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்று விரும்புகிறார். நாமெல்லாரும் பரிசுத்தமாகுதலில் தேர்ச்சி அடைந்து கடைசியில் நித்தியானந்தத்தைப் பெறும்படி கடவுள் கிருபை செய்வாராக.

ஞா. பா. 340.

# வெள்ளிக்கிழமை

## கிறிஸ்துவத்தின் மேன்மை

1 பேது. 2, 9: நீங்களோ தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியும் இராஜரீகமான ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த ஜாதியும் அவருக்குச் சொந்தமான ஜனமுமாம்.

கிறிஸ்தவர்கள் அதிகமாய்க் கௌரவிக்கப்பட்ட ஜனங்கள்—உலகத்தாரால் அல்ல, கடவுளால் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய அப்போஸ்தலனாகிய பேதுருவால் அவர்களுக்குக் கொடுக்கும் பட்டங்களைப் பாருங்கள். இது எவ்வளவு மேன்மை! ஒரு மகாராஜா தம்முடைய பிரஜைகளில் சிலரைத் தம் பிராணசிநேகிதராகக் கொண்டால் அவர்கள் இதை எவ்வளவு கௌரவமாக மதிப்பார்கள்! சர்வத்திற்கும் வல்ல கடவுள் மனுஷரைத் தம்முடைய நேச பிள்ளைகளாகத் தெரிந்தெடுப்பது இதைவிட எவ்வளவு பெரிய கௌரவம்! வாஸ்தவத்தில் கிறிஸ்தவர்கள் அதிகக் கௌரவம் பெற்றவர்கள். அடுத்தபடி நம்முடைய வாக்கியம் கிறிஸ்தவர்களை இராஜரீகமான ஆசாரியக் கூட்டம் என்று அழைக்கிறது. அவர்கள் இராஜாக்கள்; ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவோடே பாவம் மரணம் பிசாசு ஆகிய எதிராளிகள்மேல் ஆளுகை செய்கிறார்கள். அவர்கள் ஆசாரியர்களாயும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் கடவுளுக்கும் நடுவாள் தேவையில்லை; அவர்களே பாட்டுக்களாலும் ஜெபங்களாலும் துதிகளாலும் கடவுளுக்கு முன்பாக வந்து நிற்கக்கூடும். இது கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டங்களில் மிகச் சிறந்தது. மேலும் அவர் பரிசுத்த ஜாதி. இது எவ்வளவு பெரிய நன்மை! அவர்கள் ஏழைப் பாவிகளாயிருந்த போதிலும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினால் கழுவப்பட்டுப் பரித்தமாக்கப்பட்டு நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். கடைசியில், நீங்கள் அவருக்குச் சொந்தமான ஜனம் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் கடவுளுக்குச் சொந்தம். கடவுளால் தமக்குச் சொந்தமானவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அவருக்கு நித்திய காலமாய்ச் சொந்தமாயிருப்பார்கள்.

கடவுள் நம்மை இவ்வளவு அதிகமாய்க் கௌரவித்திருப்பதற்காக அவருக்கு நன்றி செலுத்தி அதற்குப் பாத்திரவான்களாய் நடப்போமாக.

ஞா. பா. 346

## சனிக்கிழமை

### ஸ்திரப்படுத்தப்பட்ட இருதயம்

**எபி. 13, 9:** கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுத்துவது நல்லது.

ஸ்திரப்பட்ட இருதயம் எது? அசைக்கப்படாத விசுவாசத்தோடு ஆண்டவராகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு சத்தியவேத போதனைகளை விட்டுவிடாமலிருக்கும் இருதயமே. அப்படிப்பட்ட இருதயம் அருமையானதுதான். ஒருவன் தேவவசனத்தில் ஸ்திரமாக்கப்படாதவனாய் இருந்தால் அவன் தன் விசுவாசத்தின் நிமித்தம் தாக்கப்படும்பொழுது அவன் எப்படி உறுதியாய் நிற்பான்? பூலோகத்தில் நிறைந்திருக்கும் அநேக கள்ளப்போதகங்களுக்கு எப்படி எதிர்த்து நிற்பான்? எது நீதி எது அநீதி என்று அறியமுடியாதநிலை சந்தேகத்தையுண்டாக்கும் அநேக சந்தர்ப்பங்களிலும் ஒருவன் எப்படி ஸ்திரமாய் நிற்கமுடியும். கடவுளின் முழு ஆலோசனையை அறிந்திருக்கும் ஸ்திரமான இருதயம்தான் உறுதியாய் நிற்கக்கூடும். இருதயம் திரு வேதாகமத்தின் விசேஷித்த போதங்களை அறிந்துகொள்வது அதிக முக்கியம். கிறிஸ்தவர்கள் விசேஷமாய்க் கடவுளின் குமாரனும் உலக இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவைப்பற்றிய போதகங்களை நன்றாய் அறிந்திருக்கவேண்டும். கடவுளுக்குமுன் நீதிமானாக்கும் இந்த வழியை நன்றாய் அறிந்திருக்கிறவன் வர வர மற்றெல்லா வேதபோதகங்களையும் அறிந்து அறிவில் முன்னேற்றம் அடைந்து இருதயம் ஸ்திரப்படுத்தப்பட்டவன் ஆவான்.

இப்படியிருக்க, நாம் தேவவசனத்தின் போதங்களை நாளுக்கு நாள் நன்றாய் அறிந்துகொள்ளும்படி அதைச் சந்தோஷத்தோடு கேட்டு ஆவலோடு படித்து ஆராய்ந்து வாசிப்பது நமது முக்கியமான கடமை ஆகும், அல்லவா? ஆம், ஸ்திரப்பட்ட இருதயம் நல்லதுதான்! இப்படிப்பட்ட இருதயமுள்ளவன் இந்தப் பூலோகத்தில் சந்தேகமில்லாத உறுதியான நன்னம்பிக்கையாய் ஜீவித்து, கடவுள் கிருபையால் பரம எருசலேமை அடைவான். இப்படிப்பட்ட ஸ்திரமான இருதயத்தைக் கடவுள் நம்மனைவருக்கும் அளிப்பாராக.

ஞா. பா. 96.

77359

## மோட்சத்தின் இன்பம்

தரி. 21 4: அவர்கள் கண்களினின்று கண்ணீர் யாவையும் துடைப்பார். இனி மரணமிராது, துக்கமும் அலறுதலும் வேதனையும் இனி இரா, முந்தினவை ஒழிந்துபோயின.

மோட்சத்தின் இன்பத்தை யார் விஸ்தரிக்கக்கூடும்? நாம் அதை யோசித்தும் சரியாய் அறிந்துகொள்ள முடியாது, ஏனெனில் நாம் லௌகீக இன்பங்களை மாத்திரம் நினைத்துக்கொள்ளக்கூடும்; ஆனால் இந்த உலகத்தின் இன்பங்களை மோட்ச இன்பங்களுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால், இவைகள் எம்மாத்திரம். விசுவாசத்தில் இந்த உலகத்தைவிட்டுத் தங்கள் பரம பிதாவின் இராஜ்யத்தில் பிரவேசிக்கிறவர்களாகப் போனவர்கள் வாஸ்தவத்தில் சொல்லி முடியாத இன்பத்தை அனுபவிப்பார்கள். அவர்கள் உடம்பு மகிமைப்படுத்தப்பட்ட இயேசுவின் சரீரத்தைப்போல ஆகும்போது அவர்களுடைய சந்தோஷம் எவ்வளவு பெரியதாகும்? ஆனால் இது சந்தோஷத்தின் ஆரம்பம் மாத்திரம். இனி அவர்களை ஒரு துன்பமும் அணுகாது. இதெவ்வளவு சந்தோஷகரமான அறிவிப்பு! பூலோகத்தில் அவர்கள் எத்தனையோதரம் அழுதார்கள், எத்தனையோதரம் அவர்கள் வியாதியினாலும் வறுமையினாலும் துன்பத்தை அடைந்திருந்தார்கள். அப்பொழுது கடவுள் அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். கண்ணீரை உண்டாக்கினதெல்லாம் அழிந்துபோயிருக்கும். பூலோகத்தில் இத்தனையோ துன்பங்களை வருவிக்கிற சாவும் இனி இராது. எந்தத் துக்கமும் அலறுதலும் இராது—எல்லாம் ஒழிந்துபோயிருக்கும். துன்பத்திற்குப் பதிலாக சந்தோஷமே இருக்கும். பரிசுத்தவான்கள் கடவுளை நேர்முகமாகப் பார்த்து அவருடைய மகிமையை அறிந்துகொள்ளுவார்கள்; அவர்கள் தங்கள் இரட்சகராகிய இயேசுவைத் தரிசித்துச் சொல்லமுடியாத சந்தோஷத்தை அடைவார்கள்; அவர்கள் கடவுளின் துதியைப் பாடுகிற தேவதூதர்களோடு இணங்கியிருப்பார்கள்; அவர்கள் தங்களுக்கு முன் பூலோகத்தை விட்டுவிட்ட எல்லா பரிசுத்தவான்களையும் தங்கள் சொந்தக்காரர்களையும் பார்ப்பார்கள். அவர்கள் பங்கு வெறும் சந்தோஷமாயிருக்கும், அந்தச் சந்தோஷத்திற்கு அளவும் முடிவும் இராது.

இந்த அழகான மோட்சத்தை அடையும்படி நாம் எல்லாரும் வழிதேட வேண்டாமா? அது எல்லாப் பாவிகளுக்காகவும் திறக்கப்பட்டிருக்கிறது.

ஞா. பா. 525

412·30

M. E. L. I. M. Press, Vaniyambadi.